# தேவனிடத்திலிருந்து
# வந்த நியமம்
# [2 தீமோத்தேயு 2]

*"நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் (என்னோடே) தீங்கநுபவி" (2 தீமோ. 2:3).*

அதிகாரம் 2ல் பவுல் அடையாளப்படுத்தும் சொற்றொடர்கள் பலவற்றைப் பயன்படுத்தினார்: "போர்ச்சேவகன்" (2:3, 4), "மல்யுத்தம் செய்பவன்'' (2:5), ''பயிரிடுகிறவன்'' (2:6), "ஊழியக்காரன்'' (2:15), "கனத்துக்குரிய பாத்திரம்" (2:21) மற்றும் "அடிமை - ஊழியக்காரன்" (2:24). இவைகளைச் சுற்றி, கிறிஸ்துவுக்குத் தம்மை ஒப்புக் கொடுத்த சீஷர் ஒருவரால் விசுவாசத்தைப் பற்றி அழகிய சித்தரிப்பொன்று கட்டியெழுப்பப் பட்டது. தீமோத்தேயு, பவுலினால் சித்தரிக்கப்பட்ட அந்த வாழ்வு முறையைப் போலச் செய்வது மட்டுமின்றி, பிற கிறிஸ்தவர்களும் அதையே செய்ய உதவுவதும் அவசியமாய் இருந்தது.

இவ்வதிகாரத்தின் பகுதிகள் நம்மை வழிவிலக்கி நடத்திச் செல்லக் கூடிய பாங்குகள் மற்றும் பண்பினங்கள், மக்கள் மற்றும் நபர்த் தன்மைகள் ஆகியவைகளை முன்னிறுத்துகின்றன. தேவனுடைய பிள்ளைகள் அவருடைய நியமத்தைச் செயல்படுத்துதல் (2:1-13), அகப்படுத்தும் கண்ணிகளில் இருந்து தப்பித்தல் (2:14-18) மற்றும் பிறரை மனந்திரும்பு தலுக்கு வழிநடத்தும்படி வாழுதல் (2:19-26) ஆகியவற்றில் உற்சாகப் படுத்துதலே பவுல் இதில் பின்னிப் பிணைத்துள்ள இலக்காக இருந்தது.

## பாடம் 5: உறுதியாய் நிலைநிற்கும் கிறிஸ்தவருக்கான நியமம் (2:1-13)

### நியமம் விவரிக்கப்படுதல் (வ. 1-8)

எண்ணியல் வல்லுநர்கள், "7" என்பது வேதாகமத்தில் பரிபூரணப்பட்ட எண் என்று நமக்குக் கூறுகின்றனர். அது உண்மையோ அல்லது கற்பனையோ, பவுல் பரிசுத்தமாக்கப்பட்ட கிறிஸ்தவ ஊழியம்

கொண்டிருக்க வேண்டிய பண்புகளாக ஏழு பண்பினங்களைக் கொடுத்தார்.

முதலாவது, ஒரு கிறிஸ்தவர் "கிறிஸ்து இயேசுவில் உள்ள கிருபையில் பலப்பட்டிருக்க"[1] வேண்டும் (2:1). இதைத் தீமோத்தேயு தேவனுடைய கிருபையினாலேயே[2] சாதிக்க முடியும். எந்த ஒரு நபரும் - நிச்சயமாக எந்த ஒரு சுவிசேஷ ஊழியரும் - தன்னிடமிருந்து வருகிற ஏதொன்றையும் தனக்குப் போதுமானதென்று கருத இயலாது (2 கொரி. 3:4-6). ஒவ்வொரு சுவிசேஷ ஊழியரும் தேவனுடன் ஒரு தனிப்பட்ட உறவு முறையைக் கட்டி எழுப்பிக் கொள்ள வேண்டும் (யாக். 4:8).

இரண்டாவது, ஒரு கிறிஸ்தவர், பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த இந்த சத்தியங்களைப் பிறருக்கு "ஒப்புவிக்க"[3] வேண்டும் (2:2). தீமோத்தேயு பலம் அடைந்திருக்கிறார் என்று நிச்சயபடுத்திக் கொள்வது முதல் முதன்மையாய் இருந்திருக்குமானால், மற்றவர்கள் பலப்படும்படி அவர்களுக்கு ஊட்டுதல் என்பது இரண்டாம் முதன்மையாக இருக்கும்.

எடுத்துக்காட்டாக, (மனந்திரும்புதல் போன்ற) வேதாகம உபதேசங்கள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள், மற்றும் ஒரு நண்பருக்கு அவ்வுபதேசங்களின் பல்வேறு படிநிலைகளைப் போதித்தல் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அந்தக் கட்டளையை நீங்கள் அவருக்கு எவ்வாறு விளக்குவீர்கள் மற்றும் அந்தக் கட்டளையைக் குறித்து அவர் அக்கறை கொள்ள எவ்வாறு நீங்கள் காரணமாவீர்கள்? பவுல் தீமோத்தேயுவுக்குப் போதித்த யாவற்றையும் (அல்லது அவர் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபங்களில் உள்ளடக்கியிருந்த யாவற்றையும்) செய்யும்படி சுவிசேஷ ஊழியர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். ஒரு சுவிசேஷ ஊழியர் எவ்வளவு தீவிரமான மாணவராய் இருக்க வேண்டியது அவசியமாய் உள்ளது!

இந்த சத்தியங்கள் "உண்மையுள்ள மனிதர்களிடத்தில்" பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியவைகளாய் உள்ளன. ஒரு சுவிசேஷ ஊழியர் தனது நேரத்தில் மிக அதிகமான பகுதியைப் படிப்பிலும், மற்றும் மாறுபாடும் முரட்டாட்டமும் கொண்டவர்களை மனமாற்ற முயற்சிப்பதில் இவற்றைப் பகிர்ந்து கொள்ளுதலிலும் செலவிட்டால், உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் ஒருக்காலும் அறைகூவல் விடப்படவோ அல்லது பயிற்றுவிக்கப்படவோ மாட்டார்கள். எவ்வளவு கவலைக்குரியது!

மூன்றாவது, ஒருவர் "நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவிக்க[4] வேண்டும்" (2:3; எபி. 10:32-34ஐக் காணவும்). இரு பண்புகள் அடங்கியுள்ளன: (1) ஊழியத்தில் அவருடைய ஆவியானது, "பாடநுபவிக்க" அல்லது உபத்திரவத்தைச் சகிக்க அவரது தயார் நிலையில் காணப்படுகின்றது. சோதனையான சூழ்நிலைகளில் ஒரு நல்ல போர்வீரன் நிலைநிற்குதல் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகின்றது. (2) அவர் தாம் செய்வது மற்றும் செல்லும் இடம் ஆகியவற்றில் தேர்ந்து கொள்ளுதலுடன் இருக்கின்றார், ஏனெனில் "தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும் … பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ள[5] மாட்டான்" (2:4). அவர் "தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவருக்கு[6] ஏற்றவராயிருக்கும்படி"[7] தமது தெரிவுகளை ஏற்படுத்துகையில் அவரது ஆவி காட்சிப்படுத்துப்படுகிறது. இவ்வகைப்பட்ட போர் வீரர், தம்மையே மறுத்தவராக,

*அன்றாடம் தம் சிலுவையைச் சுமந்து கொண்டு பிறருக்காக அல்லது பிறரருகில் உண்மையுடன் நிற்பவராய் இருப்பார் (லூக். 9:23).*

*நான்காவது, அவர் "சட்டத்தின்படி செய்கிறவராய்"[8] இருக்கிறார். இன்றைய நாட்களின் போட்டிகளில், விளையாட்டுக்கள் என்பவை விதிகளை மீறுதல் மற்றும் தண்டனை ஆகியவை இன்றி நடத்தப்படுதல் என்பது அரிதானதாக உள்ளது. நாம் வாழ்க்கை விளையாட்டில் மேம்பட்ட நிலையில் இருக்கின்றோமா? விசேஷமாக, மல்யுத்தம் என்ற விளையாட்டானது அடிக்கடி தெளிவான வகையில் போலித்தன்மை, காட்சிப்படுத்துதல், மற்றும் பாசாங்கு ஆகியவற்றுடன் காட்டப்படுகின்றது. சுவிசேஷ ஊழியரின் ஆவியும் ஊழியமும் பாசாங்குடையதாயிருந்தால் அது வெட்கக் கேடானதாக உள்ளது!*

*ஐந்தாவது, ஒருவர் "பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவர்" போலிருக்க வேண்டும் (2:6). ஒருவர் ஆவிக்குரிய ஊழியத்தில் களைப்படையவும் தனது சக்தி தீர உழைக்கவும் மனதில்லாத வரையில், அவர் நிறை வாழ்வைக் காண உத்தரவாதம் அளிக்கப்படுவதோ அல்லது இரட்சகரின் இனிய கனிகளில் பங்கேற்பதோ இல்லை (யோவா. 10:10; 13:17; மத். 11:28, 29ஐக் காணவும்).*

*ஆறாவது, ஒருவர் எல்லாக் காரியங்களிலும் "புத்தியை"[9] நாடுவதற்குக் கர்த்தரிடமாய்த் திரும்ப வேண்டும் (2:7). இப்படிப்பட்ட உட் கண்ணோட்டங்கள், பவுல் என்ன கூறுகின்றார் என்பதைக் கேட்கவும், சிந்திக்கவும்[10] நாம் கொண்டுள்ள விருப்பத்தைச் சார்ந்துள்ளன. கிறிஸ்துவின் சித்தத்தைப் பற்றிப் படிப்பதில் ஒருவர் அதிக நேரத்தைச் செலவிட விரும்பாத வரையிலும், எந்த விஷயத்திலும் முழுமையான புத்தியைச் செலுத்த மாட்டார், "ஒவ்வொன்றிலும்" குறைவுடையவராகவே இருப்பார் (யோவா. 7:17; மத். 5:6).*

*ஏழாவது, ஒருவர் கிறிஸ்துவை "நினைத்துக் கொள்ள"[11] வேண்டும் (2:8). கிறிஸ்துவைப் பற்றி நாம் நினைத்துக் கொள்ள வேண்டியவற்றைப் பவுல் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்:*

*அவருடைய வல்லமை: அறிவு எல்லைக்குப் புறம்பான வெற்றி - "மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர்." கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே அப்போஸ்தலத்துவச் செய்தியின் (அப். 2:24-36; 3:15; 4:2, 10, 33) இருதயம் போன்ற மையப் பகுதியாய் இருந்தது. ஆழ்ந்து சிந்திக்கப்படுகையில் (மற்றும் புரிந்து கொள்ளப் படுகையில்), இந்தச் செய்தியானது கிறிஸ்துவின் ஜீவன் தந்த அன்புக்குத் தன்னை அர்ப்பணிக்கும் துயருற்ற எந்த ஆத்துமாவுக்கும் இருதய சமாதானம் தரும்! அன்பார்ந்த ஒருவரின் கல்லறையில் உள்ள இந்த அஸ்திபாரமான போதனையை/உபதேசத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இதோ, அவருடைய உயிர்த்தெழுதல் என்ன ஒரு அருமையான வாக்குத்தத்தமாகவும் தயாளம் நிறைந்த நினைவுகூருதலாகவும் ஆகின்றது!*

*அவருடைய கடந்த காலம்: தீர்க்கதரிசன ரீதியான கடந்த காலம் - "தாவீதின் சந்ததியில் பிறந்தவர்" (அப். 13:22, 23; 2:25-36ஐக் காணவும்). நமது இரட்சகரின் தனிச் சிறப்பு என்பது அவருடைய உயிர்த் தெழுதலுடன் தொடர்புடையதாக இருப்பதுடன் மட்டுமின்றி, தேவனுடைய நித்திய*

நோக்கத்தின் அங்கம் என்ற வகையில் அவரை அடையாளப்படுத்துகின்ற ஒரு கடந்த காலத்துடனும் பிணைக்கப்பட்டுள்ளது. யூதர்கள் இதை விசுவாசித்திருந்தார்கள் என்றால், இது அவர்கள் விசுவாசத்தைத் தூண்டி விட்டு, பலப்படுத்தியிருக்கும்!

*அவருடைய வாக்குத்தத்தங்கள்:* தற்காலத்திய அர்த்தம் நிறைந்த செய்தி - ''என் [பவுலின்] சுவிசேஷத்தின்படியே'' - அவருடைய வாக்குத்தத்தங்களை உள்ளடக்குகின்றது (எபே. 1:3-23; 2:1-10; 3:8-13; 5:23-27; ரோமர் 1:16, 17; கலா. 1:11, 12ஐக் காணவும்). இந்த அப்போஸ்தலத்துவ சுவிசேஷம் சபையும் கிறிஸ்தவ அமைப்பும் கட்டியெழுப்பியதற்கு அஸ்திபாரமாகவே உள்ளது (எபே. 2:19-22).

*பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தினுள் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ள அறிவெல்லைக்குப் புறம்பான இந்த ஏழு அறைகூவல்களை மறுகண்ணோட்டமிடுங்கள். இவற்றில் எந்தெந்தப் பகுதிகளில் நீங்கள் பலவீனமாக இருக்கின்றீர்கள்? எவ்விடத்தில் நீங்கள் தடுமாறிச் சாய்கிறீர்கள்? விலையேறப் பெற்ற இந்த சத்தியங்களை அடைந்து, இவற்றினால் உங்கள் ஆத்துமாவை உயிர்ப்பியுங்கள், மற்றும் நீங்கள் இரட்சகரால் உங்களுக்கு நியமிக்கப்பட்ட பொறுப்பைச் சுமக்கத் தயாராக முடியும்.*

## நியமம் உதாரணத்துவப்படுத்தப்படுகிறது
## *(வ. 9-13)*

ஒரு ஓட்டத்தை தாமே நாடிய ஒருவரே நம்மையும் (நமக்கு) கொடுக்கப்பட்டுள்ள ஓட்டத்தை நாடும்படி கேட்கின்ற பொழுது, நாம் அத்துடன் ஒரு ஊக்கப்படுத்துதலைச் சேர்த்திருக்கின்றோம். சுவிசேஷத்தின் நிமித்தமாகப் பாடநுபவிக்கும் மகிமையான உதாரணத்தைப் பவுல் அமைத்து வைத்ததினால் கூட்டப்பட்ட அந்த ஊக்குவித்தலை அவர் அளித்தார் (2:9-13). பிலி. 3:7-11ல் அவர் பின்வருமாறு கூறினார்:

> ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும் ... கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், ... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.

அவர் தமது பாடுகளில் சிலவற்றை 2 கொரி. 11:24-28ல் மீண்டும் நினைவுகூர்ந்தார்:

> ... யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு

இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேக முறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும், இருந்தேன். இவை முதலானவைகளையல்லாமல், எல்லா சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள் தோறும் நெருக்குகிறது ...

கிறிஸ்துவும் கூட நமக்காகப் பாடுபட்டு, நமக்கு ஒரு முன்மாதிரியை விட்டுச் சென்றுள்ளார். 1 பேதுரு 2:21-24 பின்வருமாறு கூறுகின்றது:

இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது, பதில் வையாமலும், பாடும்படும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் ... தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; ...

## பவுலின் பாடுகளுக்கான விதிமுறைகளும் காரணமும் (வ. 9, 10)

பவுலின் பாடுகளினுடைய வன்மையை நினைத்துப் பாருங்கள் (2:9). பவுல் "சிறை வைக்கப்படுமளவுக்கு" கூடப் பாடுகளை அநுபவித்தார். குறைந்தது "விலங்குகள்" உள்ளிட்ட பவுலின் கட்டுகள், மற்றவர்கள் சிலர் அவரைச் சந்திக்க வெட்கப்படுமளவுக்கு அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தன (1:16). நம்மில் பெரும்பாலோர் ஒரு நாள் கூடச் சிறையில் ஒருக்காலும் செலவிட மாட்டோம். பவுலைப்போன்று பல ஆண்டுகள் விலங்கிடப்படுதலை நீங்கள் சகிக்க முடியுமா?

பவுல் ஒரு "குற்றவாளி"[12]யைப் போலப் பாடுபட்டார். நீதிக்கென்று ஆர்வமுள்ள ஊழியக்காரராக இருந்தும்கூட மனிதர்களால் குற்றவாளியென்று வகைப்படுத்தப்படுதல் என்பது (மனதைப்) புண்படுத்துகின்றது. இது நியாயமானதல்ல! இப்படிப்பட்ட ஒரு பெயரிடுதலினால் பவுல் வேதனைப்பட்டார், இது அவர் தமது நிலைப்பாட்டையும் தமது ஊழியத்தின் மாதிரியையும் உடனடியாக அடையாளப்படுத்திய வகையினால் மெய்ப்பிக்கப்படுகின்றது. அவர் தமது விலங்குகளைக் குறித்துத் தாம் ஏன் வெட்கப்படவில்லை என்று விளக்கினார்.

வசனங்கள் 9 மற்றும் 10ல் பவுல் தமது பாடுகளுக்கான காரணங்களைக் கொடுத்தார். எவரொருவரும் ஒரு பாதாளச் சிறையில் இருந்து அகமகிழ்ச்சி

யையோ அல்லது பிடித்து வைக்கப்பட்டிருப்பதிலிருந்து ஆறுதலையோ கண்டறிய முடியாது, ஆனால் பவுல் "தேவ வசனம் கட்டப்பட்டிருக்க வில்லை" (பிலி. 1:15-20ஐக் காணவும்) என்பதைக் குறித்து அகம் மகிழ்ந்தார். மனிதர்கள் தேவ வசனத்தைப் பிடித்து வைக்கவோ அல்லது வெற்றி கொள்ளவோ முடியாது. பவுலின் இருதயத்தில் இருந்த வசனமானது அவரைச் சிறைப்படுத்தியிருந்த சுவர்களில் இருந்து அவரை விடுதலை யாக்கிற்று. அவரிடத்திலிருந்து அந்த விடுதலையை எந்த ஒரு மனித வல்லமையும் எடுத்துக்கொள்ள முடியாதிருந்தது. ஜிம் எலியட் அவர்களின் பின்வரும் எடுத்துரைப்பை பவுல் ஒப்புக் கொண்டிருப்பார்: "தான் இழக்க முடியாததை ஆதாயப்படுத்திக் கொள்வதற்காகத் தான் வைத்திருக்க முடியாததைக் கொடுக்கிறவர் முட்டாள் அல்ல."[13] மக்கள், காலம் மற்றும் நித்தியம் ஆகியவற்றிற்கு தேவனுடைய வசனத்தின் தனிச்சிறப்பானது பவுலின் பாடுகளை நியாயப்படுத்தப் போதுமானதாக இருந்தது!

இன்னுமொரு சிந்தனையும்கூட பவுலைப் பாடுபடச் சித்தமுள்ள வராக்கிற்று. அவர், "ஆகையால், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்[14] கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை ... பெற்றுக்கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்" (2:10) என்று எழுதினார். இப்பூமியின்மீது மிகச் சிறந்த காரணத்திற்காகத் தாம் ஊழியம் செய்ததையும் மற்றும் அக்காரணத்தை முன்னேறச் செய்ததையும் பவுல் அறிந்திருந்தார். பார்க்ளே அவர்கள் கூறுகின்றபடி,

> அவருடைய பாடுகள் கருத்தற்றவையாகவும் ஆதாயமற்றவையாகவும் இருந்ததில்லை. அவர் பாடநுபவித்தார் என்ற உண்மையானது மற்றவர்களுக்கு விசுவாசித்தலைச் சாத்தியமாக்கிற்று. வேத சாட்சிகளாக மரித்தவர்களின் இரத்தமானது எப்பொழுதுமே சபைக்கு விதையாக இருந்துள்ளது; மற்றும் கிறிஸ்தவர்கள் (உயிருடன்) எரியூட்டப்பட்ட சிதையும் கூட எப்பொழுதுமே கொளுத்தப்பட்ட நெருப்பும் மீண்டும் கொளுத்தப்பட்டாலும் என்றுமே அணைக்கப் பட முடியாத ஒரு வெளிச்சமாகவே இருந்துள்ளது. எவரொருவரும் கிறிஸ்தவத்திற்காகப் பாடுபட வேண்டியிருந்தால், அவரது பாடுகள் இனி வர இருப்பவர்களுக்கு சாலையைச் சுலபமாக்குகிறது என்பதை அவர் நினைவுகூருவாராக. நாம் பாடுபடுதலில் கிறிஸ்துவின் சிலுவை யினுடைய பாரத்தில் நமது சொந்தமான சிறு பகுதியைச் சுமக்கின் றோம், மற்றும் மனிதர்களுக்குத் தேவனுடைய இரட்சிப்பைக் கொண்டு வருதலில் நாம் நமது சிறு பகுதியைச் செய்கின்றோம்.[15]

இரட்சிப்பைப் பெறுகிறவர்கள் "நித்திய மகிமையை" கொண்டிருப் பார்கள் (ரோமர் 8:28-39ஐக் காணவும்) என்று பவுல் அறிந்திருந்தபடியினால் அவரும் மனப்பூர்வமாகவே பாடுபட்டார். ஹென்ரிக்சென் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> ஒருவர் கிறிஸ்துவுடன் கொண்டுள்ள ஒருமைப்பாடு அவரது ஆத்துமாவிலும் (2 கொரி. 3:18ல் விளக்கப்பட்டபடி) மற்றும் சரீரத்திலும் (பிலி. 3:21ல் முன் வைக்கப்பட்டபடி) ஒருவரைப்

*பிரகாசிக்கப் பண்ணுகிறது. மற்றும் நித்தியத்துடன் தொடர்புடைய வகையில் இந்த மகிமையானது ஒருக்காலும் முடிவதில்லை (யோவா. 3:16). பண்பிலும் கால அளவிலும் இது பூமியின் மகிமையிலிருந்து மாறுபடுகின்றது.*[16]

### *மீட்பரின் நம்பகத் தன்மை (வ. 11-13)*

நமது மீட்பரின் நம்பகத் தன்மை பற்றி நாம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளோம். "இந்த வார்த்தை உண்மையுள்ளது" என்பது பவுலினால் பயன்படுத்தப்பட்ட ஒரு பொதுவான சொற்றொடராக உள்ளது (2:11; 1 தீமோ. 1:15; 3:1; 4:8, 9; தீத்து 3:8 ஆகியவற்றைக் காணவும்). 11 முதல் 13 வரையுள்ள வசனங்களில் உள்ளது போன்ற இப்படிப்பட்ட சொல் விளக்கத்தின் தொடக்கத்தைத் தீர்மானிக்க முடியாது, மற்றும் சிலர் செய்வதுபோல இதைப்பற்றி யூகம் செய்தல் என்பது பயனற்றதாக உள்ளது.[17] பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் கீழ் பவுல் இவ்வசனங் களை எழுதி முடித்தவுடனே இவைகள், என்னவாக இருந்தன அல்லது கடந்த காலத்தில் இந்தக் கூற்றுக்களை யார் ஒலித்திருக்கலாம் என்பதை யெல்லாம் பொருட்படுத்தாது, இவை ஏவப்பட்ட வசனங்களாகிவிட்டன. சிலர் ஐயப்படுகிறபடி இது ஒரு பாடலாக உள்ளதோ இல்லையோ, ஆனால் ஒரு உண்மை தெளிவானதாக உள்ளது: இந்தச் சிந்தனைகள், பவுல் தீமோத்தேயுவுடன் கலந்துரையாடியவற்றின் சந்தர்ப்பப் பொருளுக்குச் சரியாகப் பொருந்துகின்றன. (1) அவருடைய சோதனைகளும் பாடுகளும் இயேசு சகித்திருந்தவற்றைப் போலவே இருந்தன. (2) அவரது சகிப்புத் தன்மையினால் அவர் (மரணத்தின் மீதும் கூட) வெற்றியை ஆதாயப் படுத்தினார். (3) நாம் உண்மையுள்ளவர்களாய் நிலைத்திராவிட்டால், அது அவரது முன்மாதிரியை மாற்றி விடாது. அவர் உண்மையுள்ளவராய் இருப்பார்!

இச்சொற்றொடருக்குப் பின்னால், தீமோத்தேயுவை (மற்றும் எல்லாக் கிறிஸ்தவர்களையும்) தங்களுக்கு நேரிடும் சோதனைகளின் மத்தியிலும் உண்மையுடன் நிலைத்திருக்க உற்சாகப்படுத்துவதற்கான பவுலின் விருப்பத்தை நாம் காண முடியும். இவ்வாறு செய்வதற்கான சில காரணங்கள் பின்வருமாறு:

முதலாவது, "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடே கூடப் பிழைத்துமிருப்போம்" (2:11; ரோமர் 6:3-13; எபே. 2:1-8; கலா. 2:20). மரித்தல் என்பது கர்த்தருடனான வாழ்வுக்கு வழிநடத்துகிறதென்றால், அது மோசமானதல்ல (பிலி. 1:23).

இரண்டாவது, "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" (2:12; மத். 24:13; யாக். 5:11; எபி. 10:32-36; 12:2, 3; வெளி. 3:20-22). இக்கருத்தானது வயதான இந்த அப்போஸ்தலருக்கு அவரது வாழ்வின் இந்தக் கட்டத்தில் மையமானதாக இருந்தது. பரலோகத்தில் தேவனுடைய அரியணையைச் சுற்றிலும் இரட்சிக்கப்பட்டவர்களுடன் ஒன்றுகூடியிருத்தல் பற்றி அவர் என்ன ஒரு மகிமையான சிந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும்!

சகித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள விலை யேறப் பெற்ற இந்த இரண்டு வாக்குத்தத்தங்களுக்கு மிகவும் நேர்மாறாக, சிலர் மேற்கொள்ளுகின்ற இன்னொரு ஓட்டத்தைப்பற்றிப் பவுல் விவரித்தார். உண்மையுள்ளவர்களாய் நிலைத்திராதவர்களுக்கும் வாக்குத் தத்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாம் அவரை மறுதலித்தால், அவர் நம்மை மறுதலிப்பதில் அவருடைய உண்மைத் தன்மையின் இருமுனைச் செயல்விளைவு காணப்படும் (2:12). இயேசு பின்வருமாறு கூறினார்:

> மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் (மத். 10:32, 33).

நமது வாக்குறுதியை நாம் காக்கத் தவறினால், *அவர் தமது வாக்குத் தத்தத்தைக் காக்கத் தவற மாட்டார்* (2:13).

அவரது எச்சரிக்கைகளை நாம் நினைவில் கொள்வோமாக (மத். 12:36, 37; யோவா. 3:36; 8:21, 24; 12:48; வெளி. 20:11-15). இயேசுவைப்போல, பவுலைப்போல மற்றும் தீமோத்தேயு இருக்க வேண்டிய விதம்பற்றி இந்த சந்தர்ப்பப் பொருளில் பவுல் விவரித்ததுபோல உண்மையுள்ளவர்களாய் இருக்க நாம் பிரயாசப்பட வேண்டும்.

தேவனுடைய நிலை மற்றும் மனிதனுடைய நிலைப்பாடு ஆகியவை பற்றி பார்க்ளே அவர்கள் பின்வரும் வார்த்தைகளில் தொகுத்துரைத்தார்:

> ஒரு மனிதன் தன்னையே மறுத்துவிடலாம், ஆனால் தேவன் தம்மையே மறுத்துவிட முடியாது. "பொய்சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல" (எண். 23:19). தேவனிடத்தில் உண்மையாயிருக்க முயற்சிக்கின்ற மனிதரிடத் தில் தேவன் ஒருக்காலும் (வாக்கு) தவற மாட்டார் என்பது வாழ்வின் மாபெரும் உண்மையாக உள்ளது, ஆனால் தேவனுடன் ஏதொன்றை யும் செய்ய மறுத்துவிடுகிற மனிதனுக்குத் தேவனேகூட உதவ முடியாது. நீண்ட காலத்திற்கு முன்பு தெர்த்துல்லியன் அவர்கள் பின்வருமாறு கூறினார்: "பாடுபடப் பயப்படுகிற மனிதன் பாடுபட்ட அவருக்குரியவராய் இருக்க முடியாது" (தெர்த்துல்லியன், *De Fuga*, 14). இயேசு தேவனுடைய சித்தத்திற்கு உண்மையானவராய் இருக்கும்படி மரித்தார்; மற்றும் கிறிஸ்தவரும்கூட எந்த ஒளி பிரகாசித்தாலும், என்ன நிழல் விழுந்தாலும், தேவனுடைய அதே சித்தத்தைப் பின்பற்ற வேண்டும்.[18]

"நான் உண்மையுள்ளவனாய் இருப்பேன் என்று நான் நினைக்க வில்லை" என்று ஒருவர் கூறினால், என்ன நடக்கிறது? தீமோத்தேயுவுக்குப் பவுலின் செய்தியினுடைய அடுத்த பகுதியானது அந்தக் கேள்விக்கும் எண்ணப்போக்கிற்கும் பதில் அளிக்கின்றது.

## பாடம் 6: நியமமும் உபதேசப் பிழையும் 2:14-18)

பின்வரும் பகுதிகளில் தீமோத்தேயுவுக்கு எச்சரிக்கைகள் கொடுக்கப் பட்டன: தவறான முறையில் பிரசங்கித்தல், தேவனுடைய செய்தியாளர் அல்லது பணியாளராயிருப்பதில் வெட்கப்பட்டிருத்தல், மற்றும் தவறான செய்தியை எடுத்துரைத்தல். இந்தப் பிரச்சனைகள் மூன்றும் இன்றும்கூட தேவனுடைய மக்கள் மத்தியில் தொடர்ந்து இருக்கிறது என்பது துன்பகர மானதாக உள்ளது.

### தவறான வார்த்தைகள் (வ. 14)

உபதேசித்தல் என்பது தவறான வகையில் செய்யப்படக் கூடும் என்று பவுல் கூறினார் (2:14). சிலர் வார்த்தைகளைப் பற்றி ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல் வாக்குவாதம்[19] "செய்கிறார்கள்." இப்படிப்பட்ட முயற்சியானது வீணானதாகவும் சேதப்படுத்துவதாகவும் கூட உள்ளது. இது "பயனற்றதாகவும்" மற்றும் "கேட்கிறவர்களை அழிவுக்கு[20] வழிநடத்துகிற தாகவும்" உள்ளதென்று பவுல் கூறினார். இந்த ஆத்துமாக்கள் தீத்து 2:11, 12ல் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய நோக்கங்களை நிறைவேற்ற இயலாமல் கெட்டுப் போகின்றனர் அல்லது அழிந்து போகின்றனர். இவ்விடத்தில் அடிப்படையான தவறு செய்தியில் இருப்பதில்லை, ஆனால் படிப்பும் கலந்துரையாடலும் நிகழ்கின்ற மோசமான நோக்கங்கள் மற்றும் வகைகள் ஆகியவற்றிலேயே உள்ளது.

### சரியான அணுகுமுறை (வ. 15)

தேவனுடைய செய்தியைச் சரியான முறையில் பயன்படுத்தும்படி வசனம் 15ல் நாம் வற்புறுத்தப்படுகின்றோம். பவுல், தேவனுடைய வசனத்தைப் பயன்படுத்துவதற்கான நேர்மறையான, ஐந்து நிலை அணுகுமுறை ஒன்றைக் கொடுத்தார்.

1. நாம் "படிக்க" (KJV) அல்லது "ஊக்கத்துடன்[21] இருக்க" வேண்டும். தயாராக உள்ள வேதாகம மாணவர், வகுப்பு தொடங்குவதற்குச் சற்று நேரம் முன்னதாக "தனது பாடத்தைக் கற்க" முயற்சி செய்ய மாட்டார்! இவ்விடத்தில் அறிந்து கொள்ளும் ஆழ்ந்த விருப்பத்துடன் சத்தியத்தை ஆழமாக ஆராய்ந்து பார்க்கின்ற பேரார்வம் மிக்க, உண்மை விருப்பம் கொண்ட மாணவர் இருக்கிறார்!

2. "தேவனுக்கு முன்பாக உன்னை உத்தமனாய்[22] நிறுத்தும்படி." தேவனுடைய வசனமே தேவனுக்கு முன்பாகத் நியமமாகவும் சோதனை யாகவும் இருக்கும்பொழுது, இப்படிப்பட்ட ஆதாரச் சான்றுகள் மிகவும் புகழ்ச்சிக்குத் தக்கவையாக உள்ளன! தேவனைப் பிரியப்படுத்த நாடுதலே நமது நோக்கமாக உள்ளது. படிப்பில் இந்த அணுகுமுறையானது கொலோசெயர் 3:22, 23ல் ஊழியம் செய்வதற்கான பவுலின் நோக்கத்திற்கு/ கொள்கைக்கு இணையானதாக உள்ளது.

3. “ஊழியம் செய்பவராய்”[23] இருத்தல் என்பதே இந்தப் படிப்பின் விளைவாக உள்ளது. இந்த விளைவை நாம் கண்டும் காணாமல் விட்டுவிடக் கூடாது. ஒரு நபர் (வேதாகமத்தைப்) படித்தும்கூட ஒருபோதும் சத்தியத்தை அறியும் அறிவை அடையாமற் போகலாம் (2 தீமோ. 3:7ஐக் காணவும்). ஒருவர் படித்தும்கூட ஊழியம் செய்யாமல் இருக்கவும் கூடும். இவ்விடத்தில் பவுல் முன்னிறுத்துவது ஒரு மாபெரும் ஊழியக்காரரையும் மனவிருப்பம் கொண்ட ஊழியரையும் பெற்றெடுக்கும் படிப்பாக உள்ளது!

4. தகுந்த படிப்பானது நம்மை “வெட்கப்பட[24] அவசியமற்ற” வகையில் செயல்படுகின்ற தனிச்சிறப்பான ஊழியக்காரராக்குகின்றது. மாண்புமிக்க ஊழியத்தில் நாம் பங்கேற்று குற்றம் சாட்டப்படாத வகையில் அதை நிறைவேற்றுவது எவ்வாறு? பவுல் தனது அடுத்த சொற்றொடரில் இதற்கான பதிலைத் தந்தார்.

5. “சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து[25] போதிக்கிறவனாக.” பிரிவுபட்ட சபைகள், உபதேசங்களின்மீது வாக்குவாதம், இரட்சிப்புக்கான மற்றும் ஆராதனைக்கான தேவனுடைய வழி பற்றிய பல்வேறு வகையான உபதேசம்: இவை யாவும், தேவனும் தாமும் ஒன்றாய் இருக்கிறது போல நாம் யாவரும் ஒன்றாயிருக்கவேண்டும் என்று ஜெபித்த கிறிஸ்துவின் நாமத்தினாலேயே நடக்கின்றன (யோவா. 17:17-21; 1 கொரி. 1:10-13). தேவனுடைய வசனத்தைப் பலர் நிதானமாய்ப் பகுத்துப் போதிப்பதில்லை என்பதற்கு இந்த மாறுபாடுகள் பிரகாசமிக்க நிரூபணமாய் உள்ளது. கிறிஸ்துவின் உடன்படிக்கையின் கீழுள்ள மக்கள்மீது ஒருவர் மோசேயின் பிரமாணத்தைக் கட்டுப்படுத்தினால், அவர் சரியான வகையிலேயே வெட்கப்படக்கூடும் (கொலோ. 2:16; 1 கொரி. 9:20, 21; மத். 28:18-20). அதுபோலவே, ஒரு போதகர், மனிதருடைய பாரம்பரியங்களை தேவனுடைய பிரமாணம் என்ற வகையில் கட்டுப்படுத்தி விதித்தார் என்றால், அவரும் வெட்கப்பட்டாக வேண்டும் (மாற். 7:8-13), மேலும் அவர் சில வசனப் பகுதிகளைத் தவறாகப் பயன்படுத்தி கள்ள உபதேசத்தைக் கட்டி எழுப்பினாலோ (வெளி. 20:3-7; ரோமர் 16:17, 18; 2 பேது. 3:15, 16) அல்லது கிறிஸ்துவுக்குப் பதிலாகத் தாமே கட்டளையிடத் தகுதி வாய்ந்தவர் என்ற வகையில், தேவனுடைய மக்களை நடத்தினார் என்றாலோ (3 யோவா. 9-12ஐக் காணவும்) அவர் வெட்கப்பட்டாக வேண்டும். இப்படிப்பட்ட தவறான பயன்பாடுகளுக்கு நேர் மாறாக, வேதாகம மாணவர் ஒவ்வொருவரும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிப்பதில், அங்கீகரிக்கப்பட்ட, தேவனால் வழிநடத்தப்பட்ட வகை முறையில் படிக்கவும் ஊழியம் செய்யவும் உண்மையில் விருப்பம் கொள்வாராக.

## தவறான செய்தி (வ. 16-18)

அடுத்ததாகப் பவுல், தவறான செய்தியைப் போதித்தலின் அபாயம் பற்றிக் கலந்துரையாடினார் (2:16-18). ஏதேன் தோட்டத்தில் இருந்தே மக்கள் தவறான சிந்தனை மற்றும் கள்ள போதகர்களினால் வாதிக்கப் பட்டிருந்தார்கள். இதன் விளைவாக, சத்தியம் நிலைநின்றாலும், தனி

நபர்கள் விழுந்து போகின்றனர். இந்த வலையை/கண்ணியைத் தவிர்க்கும்படி தீமோத்தேயுவைப் பவுல் எச்சரித்தார்!

தவறான செய்தியை, ''சீர்கேடான வீண் பேச்சு'' என்று பவுல் அடையாளப்படுத்தினார். இது உண்மையில் "இரட்டை தொந்தரவாக" உள்ளது. முதலாவதாக, இது "சீர் கேடானதும் வீணும் ஆனதாக"[26] உள்ளது. ''உலகப்பிரகாரமானது'' (சீர் கேடானது) என்பது இது எவ்வாறு ஒவ்வொருவரின் மத்தியிலும் பரவ முடியும் என்பதை விவரிக்கின்றது, மற்றும் "வீண்" என்பது, இது ஒருவருக்கும் உதவி செய்யாமல் மதிப்புமிக்க நேரத்தைக் கவர்ந்து கொள்கின்றது என்பதை வலியுறுத்துகின்றது! இரண்டாவது, இச்செய்தியானது "(வீண்) பேச்சாக"[27] மட்டுமே உள்ளது.

இது போலச் சுற்றி வரும் பேச்சினை விட்டு "விலகியிருக்கும்"[28]படி தீமோத்தேயுவுக்குப் பவுல் கட்டளையிட்டார். பயனற்ற பிதற்றல் என்பது ஒரு நாளின் (உணவுப்) பட்டியலாய் இருக்கையில், தேவனுக்காகப் பேசுபவர் அதை விட்டுப் புறம்பே செல்ல வேண்டியது அவசியம். "அவர் இதை எடுத்துப் போட முடியாது" என்று மக்கள் கும்பலினால் ஏற்படுத்தப் படும் குற்றச்சாட்டுகளை அவர் எதிர்கொண்டாலும் கூட, கலந்துரை யாடலில், "கர்த்தர் கூறுவதாவது" என்பதற்கு இடம் இருக்கும் பொழுது மட்டுமே அவர் திரும்ப வேண்டும். இப்படிப்பட்ட பேச்சுகள் உண்டாக்கும் கனிகளே நாம் ஏன் இதை விட்டு விலகியிருக்க வேண்டும் என்பதற்கான காரணத்தைத் தெளிவாக்குகின்றது: அது ''தேவ பக்தியில்லாமை."[29] இப்படிப்பட்ட சூழ்நிலையில், தேவனைப் பற்றியோ அல்லது தேவனுடைய வசனத்தைப் பற்றியோ பேசப்படும் ஒரு கலந்துரையாடலும் கூடத் தேவபக்தியில்லாமையை உருவாக்கும்!

உலகப் பிரகாரமான, வீணான பேச்சுக்கள் "அரிபிளவை"[30] போலச் செயல்படும் ஆவிக்குரிய அமிலத்தை உண்டாக்கக் கூடும், இது கர்த்தருடைய ஆவிக்குரிய சரீரமான சபையை அரித்து உண்டு விடுவதாக இருக்கும். கலாத்தியர் 5:15, ''நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப் படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று கூறுகின்றது.

---

தவறான செய்தியாளர்கள் தவறான செய்தியை மேம்படுத்துவதினால் அது புகழ்ச்சியை அடைகின்றது! குறிப்பாகப் பவுல், தவறான செய்தி யாளர்களுக்கு உதாரணங்களாக இமெநே மற்றும் பிலேத்து ஆகியோரைப் பெயர் குறிப்பிட்டுக் கூறினார். 2:17ல் கொடுக்கப்பட்டதைத் தவிர வேறொன்றும் அதிகமாக பிலேத்துவைப் பற்றி அறியப்படுவதில்லை. வார்டு அவர்கள் பின்வருமாறு எடுத்துரைத்தார்: "இமெநே இதற்கு முன்னதாகவே எதிர்கொள்ளப்பட்டுள்ளார் (1 தீமோ. 1:19). அவர் தம் மனச்சாட்சியைப் புறக்கணித்து, தனது விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்தியிருந்தார், மற்றும் அவர் ஐக்கியத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தார் ... இமெநே என்பவர் பாவத்தில் பிடிவாதமாய் நிலைத்திருத்தல் என்பதற்கு உதாரணமாக இருக்கின்றார்."[31] இந்தக் கள்ள போதகர் பிடிவாதமாய் நிலைத்திருப் பவராய் இருந்தது மட்டுமின்றி, 1 தீமோத்தேயு நிருபத்தின்படி இவர் கலகத்திற்குக்

காரணமாகுதலின் வழிகாட்டியாகவும் இருந்தார். இந்த விஷயத்தில், இவர் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இவரும் மற்ற கள்ள போதகர்களும் வசனங்கள் 14 மற்றும் 16ல் விவாதிக்கப்பட்ட சீர்கேடான வீண் பேச்சின் வட்டாரத்தில் இயங்கிக் கொண்டிருந்தனர் என்பது உறுதி.

இவர்களின் முன்மாதிரியானது "சத்தியத்தை விட்டு விலகிச்[32] சென்ற ஒரு மனிதருடையதாய்" இருந்தது. சத்தியம் என்ற இலக்கை விட்டுத் தவறுபவர், சத்தியமற்றவைகளை உள்வாங்கிக் கொண்டு அவற்றைப் பிறருக்கும் பரப்புவதில் முக்கியமான நபராய் இருக்கின்றார்!

"உயிர்த்தெழுதல் ஏற்கனவே நடந்தாயிற்று" என்பதே இவ்விரு மனிதர்களின் அறிவித்தலாய் இருந்தது (2:18). இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறிப்பிடவில்லை, ஆனால் கிறிஸ்தவர் ஏற்கனவே உயிர்த்து விட்டார் என்று மறைமுகமாய் உணர்த்துகின்றது. ஹென்ரிக் ஸென் அவர்கள் பின்வருமாறு கவனித்துள்ளார்:

> இப்பொழுது பவுலும் கூட, பாவங்களிலும் அக்கிரமங்களிலும் மரித்தவர்களாய் இருப்பவர்களுக்கு தேவன் புதிய ஜீவன் அருளும் செயலான ஆவிக்குரிய உயிர்த்தெழுதலை விசுவாசித்தார் என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் (ரோமர் 6:3, 4; எபே. 2:6; பிலி. 3:11; கொலோ. 2:12; 3:1; மற்றும் இ.வா. லூக். 15:24). ஆனாலும் அப்போஸ்தலர் (இங்கு) இயேசு செய்திருந்தது போலவே (யோவா. 5:28) சரீர உயிர்த்தெழுதலைப் பற்றி மிகவும் திட்டவட்டமாகப் போதித்தார் (1 கொரி. 15; பிலி. 3:21). பவுலின் போதனைப்படி, சரீர உயிர்த்தெழுதலை மறுத்தல் என்பது விசுவாசத்தை முற்றிலுமாகத் தூக்கியெறிதலாகி விடுகிறது, ஏனெனில், "மரித்தோரின் உயிர்த் தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா ... நீங்கள் இன்னும் உங்கள் பாவங் களில் இருப்பீர்கள்" (1 கொரி. 15:13, 14, 17).[33]

யூதர்களுக்கு இடுக்கண் உண்டாக்கிய சதுசேயர்கள் (லூக். 20:27), அத்துடன் (உடலைப் பொல்லாங்கானதாகக் கண்ட) தேவ நம்பிக்கையற்ற சிலர் மற்றும் (அழியாமையில் நம்பிக்கை கொண்டிருப்பினும் சரீர உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்ற) சில கிரேக்கர்கள் ஆகியோர் இந்த கள்ள போதனையை ஏற்பவர்களாய் இருந்திருப்பார்கள். இவ்விதமாக, இமெநேயும் பிலேத்துவும், கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமான மற்றும் இன்றியமையாத நம்பிக்கைகளில் ஒன்றை வலிவற்றதாக்கும் கள்ள உபதேசம் ஒன்றைப் போதித்துக் கொண்டிருந்தனர்!

"சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்[34] போடுதல்" என்பதே இவர்களின் போதித்தலினுடைய உற்பத்திப் பொருளாக (கனியாக) இருந்தது. அவர்கள் தங்களை மட்டுமே பாதிப்புக்குள்ளாக்கிக் கொள்ள வில்லை. பிறர் மீது நாம் செல்வாக்குச் செலுத்தக் கூடும்படி தேவன் நம்மைப் படைத்தார் (1 தீமோ. 4:12) என்று நல்லதாகவே உள்ளது, ஆனால் மக்களை சத்தியத்திலிருந்து விலக்கிப் போடும்படிக்கு மனிதர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துவதென்பது எவ்வளவு கவலைக்குரியதாக

உள்ளது! மக்கள் உங்களைப் பின்பற்றினால், அவர்கள் தேவனிடத்திற்கும் சுவிசேஷத்தினி டத்திற்கும் வழிநடத்தப்படுவார்களா (2 கொரி. 3:2, 3) அல்லது சத்தியத்திலிருந்து புறம்பே வழிநடத்தப்படுவார்களா?

## பாடம் 7: நியமமும் கிறிஸ்தவரின் வாழ்வு முறையும் (2:19-26)

மனித தவறுகளும், விரோதங்களும் மற்றும் தோல்விகளும் "தேவனுடைய உறுதியான அஸ்திபாரத்தை" (2:19) அசைக்க முடியாது. இந்த "உறுதியான அஸ்திபாரம்" என்பது மாறுபட்ட மனிதர்களால் (1) தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்,[35] (2) கிறிஸ்து தாமே, (3) சபை மற்றும் (4) மனிதர்கள் பரிசுத்தமாக்கப்பட பயன்படும் தேவனுடைய தெய்வீக சத்தியங்கள் என்றெல்லாம் பெயரிடப்பட்டுள்ளது.[36] இவற்றில் மூன்றாவது அல்லது நான்காவது கருத்துதான் இந்த வசனத்தின் சந்தர்ப்பப் பொருளில் சரியானதாக இருக்க முடியும். இது மூன்றாவதான, சபையாக உள்ளது என்றால், அது (1 தீமோ. 3:14, 15; எபே. 5:25, 26; லூக். 1:33 ஆகியவற்றில் உள்ளது போல எதார்த்த நிலையிலானதாயிராமல்) கொள்கையளவில் தனிச் சிறந்ததாக உள்ளது, ஏனென்றால் இதன் சந்தர்ப்பப் பொருளே, சபையில் உள்ள சிலர் வீணே திரிபவர்களாக, சீர்கேடும் வீணுமான பேச்சுக்களைப் பேசி, ஆத்துமாக்களைக் கவிழ்த்துப் போடுகிறவர்களாக இருக்கின்றனர் என்று காண்பிக்கின்றது. இவ்வகைப் பண்பு கொண்ட சபையானது "உறுதியாய்" இருப்பதற்கு மாறாக அசையக் கூடியதாகவும் நிலையற்றதாகவும் உள்ளது.

இந்த சந்தர்ப்பப் பொருளில் "உறுதியானது" என்பது என்னவாக உள்ளது? இது பவுல் தீமோத்தேயுவுக்கு அளித்ததும், அவர் (தீமோத்தேயு) "உண்மையுள்ள மனுஷரிடத்தில்" ஒப்புவிக்கும்படி பவுல் விரும்பியதுமான மாண்புமிக்க செய்தியாக உள்ளது (2:2) - சுவிசேஷம் "கட்டப்பட முடியாத"தாகவும் (2:9), இரட்சிப்பு "நித்திய மகிமையுடன்" பெற்றுக் கொள்ளும்படியானதாகவும் (2:10) மற்றும் அதை நாம் நிதானமாய்ப் பகுத்துக் கையாளும்போது தேவனுக்கு முன்பாக மனிதர்களை அங்கீகரிக்கின்றதாகவும் இருக்கின்றது (2:15). அது இராஜ்யத்தின் விதையாக உள்ளது (லூக். 8:10, 11) மற்றும் அசைவில்லாத ஆனால் "நிலைநிற்கிற"[37] தேவனுடைய உறுதியான அஸ்திபாரமாக உள்ளது.

தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் ஒரு "முத்திரையை" கொண்டுள்ளது. வேத வசனங்களில் "முத்திரை" என்ற வார்த்தை எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு ஹென்ரிக்ஸென் அவர்கள் ஒரு நல்ல விரிவுரையைக் கொடுத்தார்:

> இப்பொழுது, ஒரு முத்திரை என்பது அதிகாரத்தைச் சுட்டிக் காண்பிக்கலாம், மற்றும் இவ்விதமாக இது இடைக் கெடுதல் எதையும்

நிகழாமல் பாதுகாக்கலாம் அல்லது குறைந்தபட்சம் அவற்றிற்கெதிராக எச்சரிக்கை செய்யலாம் இவ்விதமாக, இயேசுவின் கல்லறை முத்திரையிடப்பட்டது (மத். 27:66). மீண்டுமாக, இது உரிமைத் துவத்தின் ஒரு குறியீடாக இருக்கலாம். ''நீர் என்னை உமது இருதயத்தின்மேல் முத்திரையைப்போல ... வைத்துக்கொள்ளும்'' (உன்னதப்பாட்டு 8:6). அல்லது இது சட்டப்பூர்வமான ஒரு ஆணையை அல்லது பத்திரத்தை அங்கீகரித்து, அதன் உண்மையான பண்பினைச் சான்றளித்து உத்தரவாதப் படுத்தலாம். இவ்விதமாகவே அகாஸ்வேருவின் ஆணையானது முத்திரையிடப்பட்டது (எஸ்தர் 3:12; 1 கொரி. 9:2ஐக் காணவும்).[38]

''முத்திரை'' என்பது ''இராஜ்யத்தின் விதை'' அல்லது தேவனுடைய வசனத்துடன் இணைவு கொண்டிருக்கிறது என்றால், விளக்கங்கள் நம்பக் கூடியவைகளாகக் காணப்படுகின்றன, ஏனெனில் வசனம் நம்மை உண்மையாகவே காக்கக் கூடும் (மத். 4:1-10; ரோமர் 1:16; எபே. 6:17). அது அவருடையவர்களாய் இருப்பது யார் என்பதை அறிவிக்கிறது (ரோமர் 8:16, 17; 2 யோவா. 9) மற்றும் அது ஒருவரை உண்மையுடையவர் மற்றும் அதிகாரம் உடையவர் என்று பெயரிடுகின்றது (யோவா. 8:31).

## நமது வாழ்வு முறையின் ஆதார மூலமும் பொருளும் (வ. 19)

"கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (2:19) என்று எழுதுகையில் பவுல், ஆதார மூலத்தைக் கொடுத்தார். தேவன் நம்மை வாங்கினார்; நாம் அவருடைய விலையேறப் பெற்ற உடமைகளாக இருக்கின்றோம்.[39] அவருடைய நற்தன்மை மற்றும் கிருபையினால் நாம் அவருடையவர்களாய் இருக்க முடியும். ஏவுதல் பெற்ற மனிதர்களின் மூலம் ஆவியானவர் கொடுத்துள்ள வசனத்தின் மூலமாக, விசுவாசிக்கவும் (யோவா. 6:29; ரோமர் 10:17), மனந்திரும்ப (அப். 11:16-18; ரோமர் 2:4), கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறவும் (ரோமர் 6:3, 4; கலா. 3:26, 27), மற்றும் அவருடைய சரீரமாகிய சபைக்குள் பிரவேசிக்கவும் (1 கொரி. 12:13; கொலோ. 1:18) நமக்கு வாய்ப்புகள் வருகின்றன.

தேவனே நமது வாழ்க்கை முறையை ஏற்படுத்துகிறவர் என்பதால், நாம் "அநியாயத்தை விட்டு விலக"[40] வேண்டும் (2:19). நாம் அநியாயத்தை விட்டு விலகாதிருந்தால், அதை(யும்) தேவன் அறிவார். சிலர் அவருடைய மக்களை விட்டு விலகினர் (எபி. 6:4-6) என்பதையும், ஒரு நாளில் சிலர் இராஜ்யத்தை (அல்லது சபையை; மத். 13:47-50; 21:33-46; லூக். 13:23-30) விட்டுப் புறம்பே தள்ளப்படுவார்கள் என்பதையும் அவர் அறிகின்றார். சிலர், தாங்கள் அவருடையவர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். அவரோ வேறு விதமாக (அவர்களை) அறிகின்றார் (மத். 7:20-23). அவர் நம்மை அறிகின்றார்![41] ஒன்று, இன்றைய நாட்களில் நாம் அநியாயத்தை விட்டு விலகியிருப்போம், அல்லது ஒரு நாளில் அவர் நம்மைத் தம்முடைய பிள்ளைகள் என்று ஒப்புக்கொள்வதிலிருந்து "விலகியிருப்பதை" நாம்

கேள்விப்படுவோம், அப்பொழுது அவர் நம்மை விருப்பமற்ற அடைவிடத்திற்கு நித்தியத்திற்கும் இருக்கும்படி அனுப்பி வைப்பார்.

## வாழ்வு முறையின் வகைகள் (வ. 20)

நாம் தேவனுடைய பிரமாணத்தை மீறும்பொழுது, நாம் தேவனைக் கனவீனப்படுத்துகின்றோம் (ரோமர் 3:23). அவர் நம்மைத் தமது சாயலாகப் படைத்தார் (ஆதி. 1:27, 28) என்பதைக் காட்டிலும் மேன்மையான நோக்கமான, நாம் அவரைப்போல் இருக்க வேண்டும் (மத். 5:48; யாக். 1:18; 2 பேது. 1:3, 4) என்பதற்காகவே அவர் நம்மை வடிவமைத்தார். இங்கு நாம் பொன்னாக அல்லது வெள்ளியாக அல்லது மரமாக இருக்கிறோமா, என்பது உண்மையான அக்கறைக்குரிய விஷயமாய் இருப்பதில்லை. எல்லா மக்களுக்காகவும் இயேசு மரித்தார் (2 கொரி. 5:14, 15), மற்றும் ஒருவர் மற்றவரைக்காட்டிலும் அதிகமானவற்றைச் செய்ய இயலும் என்பது பற்றிய தேவனுடைய அறிதலை உரையின் பல்வேறு உருவகங்கள் அறிவிக்கின்றன (மத். 25:14-30; 1 கொரி. 12:12-27). மிகவும் பலவீனமானவர்களை(யும்) தேவன் விரும்புகின்றார், மற்றும் அவர்களை "அவசியமானவர்கள்" என்று கருதுகின்றார். பலவீனத்தில் (தான்) அவருடைய வல்லமையும் கிருபையும் பரிபூரணமடைகின்றன (2 கொரி. 12:7-10). எல்லா மக்களும் அவருடையவர்களாய் இருப்பதற்கு, நித்தியத்தை அவருடைய பல வாழ்விடங்களில் பகிர்ந்து கொள்வதற்கும் சாத்தியக் கூறுடையவர்களாய் உள்ளனர். இதோ, அவர் நம்மை எவ்வளவு அதிகமாய் அன்புகூர்ந்தார்!

நாம் "கனத்திற்கு"[42] உரிய மக்களாய் இருக்கின்றோமா இல்லையா என்பதே "வகைகள்" என்பது பற்றிய உண்மையான சோதனையாக/பரீட்சையாக உள்ளது. பிள்ளைகள் தங்கள் பெற்றோரைக் கனப்படுத்த முடியும் (எபே. 6:1-3), மற்றும் கணவர்கள் தங்கள் மனைவிகளைக் கனப்படுத்த முடியும் (1 பேது. 3:7). எல்லாவற்றிற்கும் மேலாக, மக்கள், தேவனையும் அவருடைய குமாரனையும் கனப்படுத்த வேண்டும்.

இதற்கு நேர்மாறாக, நாம் "கனவீனப்படுத்துதல்"[43] என்ற குற்றவுணர்வு கொண்டவர்களாய் இருக்கக் கூடும் என்ற உண்மை(யும்) உள்ளது. தேவன் நம்மைத் தம்முடைய சாயலாகவே படைத்தார், நம்மை அவர் விலங்குகளுக்கு மேலானவர்களாகப் படைத்தார் (ஆதி. 1:26-28); ஆனால் நாம் பிசாசின் பிள்ளைகளாக மாறினால் (யோவா. 8:43, 44), நாம் கொடிய விலங்குகளைக் காட்டிலும் மோசமானவர்களாக, மற்றும் இறந்த உடலைக் காட்டிலும் அதிகம் வெறுக்கப்படத் தக்கவர்களாக இருக்கின்றோம்! உங்கள் வாழ்க்கை முறை தேவனைக் கனப்படுத்துகின்றதா அல்லது கனவீனப் படுத்துகின்றதா?

## நமது வாழ்வு முறையில் சரிப்படுத்துதல்களை ஏற்படுத்துதல் (வ. 21-26)

நாம் பாவமுள்ள உலகில் பிறந்த வேளையில், நாம் பிறந்த இடத்தின்

காரணமாக நாம் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட மாட்டோம். மாறாக, நம்மைப் பாவத்திலிருந்து விடுதலை செய்வதற்குக் கிரயம் செலுத்தியவரையும், நமது கட்டுக்களையும் விலங்குகளையும் விடுவிக்கிற கிறிஸ்துவைப் புறக்கணிப்பவர்கள் மீதுதான் ஆக்கினைத் தீர்ப்பு வரும். கலகம் செய்கிற ஒருவர், தாமே ஏற்படுத்திக் கொண்ட சிறையிலிருந்து வெளிவராவிட்டால் (பாவம்; ரோமர் 3:23), அவர் கிறிஸ்துவின் கிருபையையும் அளிக்கப்பட்ட இரட்சிப்பையும் புறக்கணிக்கிறார் (யோவா. 3:16; எபி. 5:8, 9).

நமது தவறுக்கு மேலாக எழுந்து நிற்கும் செயல்முறையைப் பவுல் அடையாளப்படுத்தினார்: "ஆகையால், ஒருவன் இவைகளை விட்டுத் தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால்" (2:21). சுத்திகரித்தல் என்பது நம்மை கனத்துக்குரிய பாத்திரங்களாகக் கூடியவர்களாக ஆக்குகிறது (2:20ல் உள்ள அதே வார்த்தை). இது நம்மை தேவனுக்கு மதிப்பு மிக்க மக்களாக்குகிறது. நம் ஒவ்வொருவருக்காகவும் அவருடைய குமாரன் மரித்தார் என்ற உண்மையில், நாம் அவருக்கு எவ்வளவு மதிப்பு மிக்கவர்களாய் இருக்கிறோம் என்பது தெளிவாகின்றது.

நாம் "பரிசுத்தப்படுத்தப்பட"[44] முடியும். இது, அவர் நமக்குச் செய்துள்ள செயலானது நம்மை மதிப்புக்குரிய பாத்திரங்களாகக் கூடியவர்களாக்குகிறது என்பதை வலியுறுத்துகிறது.

இது போலவே, நாம் "எஜமானருக்கு உபயோகமானவர்களாய்"[45] ஆக முடியும். ஒவ்வொருவரையும் பயன்படுத்துதல் என்பது கர்த்தருக்கு எளிதாகும்படியாக எஜமானரின் கிருபையுடனும் இரக்கத்துடனும் சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தொடர்பு கொண்டால் அது எவ்வளவு அற்புதமானதாக இருக்கும்! மாற்றுவிக்கும் அவருடைய வல்லமையினாலோ அல்லது அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்று வதில் அவரது மக்களின் இயல்பினாலேயோ, ஒவ்வொருவரும் மகிழ்வுடனும் பயன்மிக்க வகையிலும் பணியமர்த்தப்படக் கூடும் (யோவா. 13:17; எபே. 4:15, 16). உங்களைப் பயன்படுத்துதல் கர்த்தருக்குச் சுலபமானதாக உள்ளதா?

அவர் மூலமாக நாம் "நல்ல ஊழியம் ஒவ்வொன்றிற்கும் ஆயத்தமாக[46] முடியும்." தேவனுடைய ஊழியத்தில் உங்கள் இடத்தையும் முக்கியத் துவத்தையும் காணும் வரையிலும், போதிக்கப்பட்டுள்ள சத்தியங்களை ஆழமாக சிந்தியுங்கள்! நீங்கள் தனிச் சிறப்புள்ள பாத்திரமாய் இருக்க முடியும்!

நமது பிரிதலின் வகையானது "பாலியத்துக்குரிய இச்சைகளில்[47] இருந்து விலகியோடும்[48]படிக்கான" அழைப்பில் காணப்படுகின்றது. அபாயம் உண்மையானதாகவும் அண்மையிலும் இருக்கும் பொழுது நாம் விலகி ஓடுகின்றோம். மரணத்தைக் கொண்டு வருகிற பாவமும் இச்சைகளும் மிகவும் உண்மையானவைகளாகவும், எப்பொழுதும் அண்மையில் உள்ளவைகளாகவும் இருக்கின்றன (யாக். 1:14, 15).

நியமமானது "நாடுவதற்கான"[49] வளமையான சிலவற்றையும் பக்தி விருத்தியையும் நமக்கு அளிக்கின்றது. நாம் நாட வேண்டியது எது? நாம் பின்பற்ற வேண்டிய பண்புகளின் பட்டியல் ஒன்றை அவற்றின் கனிகளுடன் பவுல் கொடுத்தார்:

| பண்பினம் | செயல்விளைவு அல்லது அளிப்பு | இலக்கு அல்லது கனி |
|---|---|---|
| நீதி | நடக்கை (மத். 7:12; ரோமர் 12:20, 21) | ஆவிக்குரிய ஊழியம் |
| விசுவாசம் | நம்பிக்கை (எபி. 11:1) | ஆவிக்குரிய பலம் |
| அன்பு | அக்கறை (1 கொரி. 13:1-8) | ஊழியத்தில் ஆவி |
| சமாதானம் | ஆறுதல்; மனநிறைவு (பிலி. 4:4-13) | ஆவிக்குரிய ஆறுதல் |
| தூய்மை | தோழமை (ரோமர் 12:10; கலா. 6:10) | சமூக நிறைவு |

*இந்தப்பட்டியலைக் கவனமாகக் கண்ணோக்குங்கள். இவற்றில் எந்தப் பண்பினை நீங்கள் அதிகம் ஊக்கத்தோடு நாட வேண்டியது அவசியமாய் உள்ளது?*

*தவிர்க்கப்பட வேண்டிய தவறின் வகையானது, "புத்தியீனமான" மற்றும் "ஒன்றும் அறியாத" கேள்விகள் உள்ளிட்ட இருமடங்கானதாக உள்ளது (2:23; 1 தீமோ. 6:4ஐக் காணவும்). ஒருவர், பல்வேறு வழிகளில் "புத்தியீனமாக"[50] இருக்கக் கூடும். ஆசாரியராய் இருந்த ஏலி இதற்கு நல்லதொரு உதாரணமாக இருக்கிறார். தேவனுடைய வசனத்திற்கு அவரது எண்ணப்போக்கிற்கெதிராக தேவன் அவர் மீது கூறிய ஐந்து குற்றச் சாட்டுகளை நாம் 1 சாமுவேல் 2:29; 3:13, 14; 5:18 ஆகிய வசனங்களில் காண்கின்றோம். ஆராதனைக்கான தேவனுடைய வழிகள் அல்லது அவருடைய கட்டளைகள் குறித்து நீங்கள் குறை காண்பவராக இருக்கின்றீர்களா?*

*"ஒன்றும் அறியாதவராய்" இருப்பவரைப் பற்றிப் பவுல் பேசினார். இந்த எளிய ஆத்துமா அறிவதில்லை, மற்றும் தான் அறியவில்லை என்பதையும், இது அறிவதில்லை. இவர் ஒரு சிறு குழந்தையாய் இருக்கிறார்! இவருக்குப் போதிக்கப்பட வேண்டும் (எபி. 5:11-14).*

*புத்தியீனமும் ஒன்றும் அறிவில்லாத பேச்சும் "சண்டைகளைப் பிறப்பிக்கும்" (2:23ஆ; 1 தீமோ. 6:3-5). "பிறப்பிக்கும்" என்பதற்கான வார்த்தையானது* (Gk.: *geinao*) *பெறுதல் அல்லது பிறப்புக் கொடுத்தல் என்பதற்குரிய வார்த்தையாக உள்ளது. புத்தியீனமான கேள்விகள் "சண்டையைப்" பிறப்பிக்கிறது.*

*கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட நடக்கையில் பிடிபடும் பொழுது,*

ஏதோ சில விஷயங்கள் தவறானவைகளாய் உள்ளன. இது சத்தியத்தின் கனியைப் பிறப்பிக்காது. இந்த வட்டாரத்தில் சத்தியத்தை நாடுகிறவர், "தவறான மரத்தைப் பார்த்துக் குரைப்பவராக" இருக்கிறார்!

## தவறில் உள்ளவர்களைக் கையாளுவதற்கான வழிநடத்துதல்கள் (வ. 24-26)

அடுத்ததாகப் பவுல், சத்தியத்திற்கு எதிராய் இருப்பவர்களைத் "திருத்துகிறவராய்" இருக்கிற கிறிஸ்தவர் பற்றிப் பேசினார். இவர்கள், "கட்டளையிடுபவரால்" அனுமதிக்கப்பட்ட வகையில் மனந்திரும்புதலின் வழியினால் "திருத்தப்பட்டவர்களாக" ஆகலாம்.

திருத்துபவர் இவ்விடத்தில் கர்த்தரின் அடிமை ஊழியர் என்று குறிப்பிடப்பட்டார் (2:24), இவர் குறிப்பாய்ப் பெயரிடப்பட்ட பின்வரும் பண்பினங்கள் பலவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:

1. சாந்தம். இந்த ஆவியானது சண்டையிடுதல் அல்லது விரோதம் என்பதற்கு நேர்மாறானதாக உள்ளது. ஒருவரின் மோசமான இயல்பில் இருந்தே சண்டையிடுதல் வருகிறது (2:23).

2. போதிக்கும் திறமை. இந்த சந்தர்ப்பப் பொருளில் விவரிக்கப் பட்டுள்ள மனந்திரும்பாத ஆத்துமாக்களைக் கையாளும் பொழுது, இந்தப் பண்பின மானது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. சரியான வகையிலான போதகர், தீய வழிகளிலிருந்து ஒருவரை அல்லது ஒருத்தியை அன்புடன் பிரித்துக் கொண்டு வர முடியும். போதித்தல் என்பது "வெளிப்படையாய்க் காண்பிப்பவருக்கு ஒரு பாடத்தை முன் வைத்தல்" என்பதைவிட மிகவும் அதிகமானதாக உள்ளது; இது ஒரு நபர் பயன்படுத்து வதற்காக மருத்துவக் குறிப்பை எழுதும் மருத்துவர் போல ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மற்றவரின் தேவைகளைச் சந்திப்பதாக உள்ளது.

3. பொறுமை. இந்த ஒழுக்க நெறியானது நடைமுறைப்படுத்தப்படும் பொழுது, முரட்டாட்டமுள்ள ஆவியை முறிப்பதற்கு இது ஒரு வல்லமை நிறைந்த ஆயுதமாக உள்ளது. இதன் மூலமாகவே ஒருவர் தீமையை நன்மையினால் வெல்ல முடியும்.

4. சாந்தம் (Gentleness) (2:25). இது ஒரு பலமான, வாழ்வை மாற்றுகிற பண்பாக உள்ளது, இது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வல்லமை என்று விளக்கப்படுகிறது. "விட்டுக் கொடுத்தல்" என்ற எண்ணப்போக்கைக் காட்டிலும் அதிகமானதாக உள்ள இந்தப் பண்பு பிறரைக் கட்டி எழுப்பி, உயர்த்துகின்றது.

5. எதிர் பேசுகிறவர்களைத் திருத்துதல்[51] என்பது - காண்பித்தல் மற்றும் கூறுதல் ஆகிய இரண்டிலும் - அறிவுறுத்துதலையும் பயிற்றுவித்தலை யும் உள்ளடக்குகிறது. வழிகாட்டும் நெறிகள் எச்சரிக்கையாய்க் கவனிக்கப் படாத பொழுது, எச்சரிக்கைகளும் கடிந்து கொள்ளுதலும் தேவைப் படுகின்றன. தண்டனை கூட அவசியமானதாக இருக்கலாம். போதித்தலில் சாந்தமும், சகிப்புத் தன்மையும் மற்றும் திறனும் உள்ளவரால் இவை யாவையும் செயல்படுத்தப்பட வேண்டும்.

*தவறில் உள்ளவர்களுக்கு கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள இவ்வகைப் பட்ட அடிமை ஊழியரால் இவ்வகையான செயல்பாடானது எவ்வளவு அதிகமாய் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது? இந்தப் பணித்திறனில் ஊழியம் செய்யத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டவர்கள் எத்தனை பேர்? இப்படிப்பட்ட அடிமை ஊழியர்களை நாம் கொண்டிருந்தால், எத்தனை பேரை மீட்டிருக்க முடியும்?*

வனப்புமிக்க இந்த முழுச் செயல்பாடும், எதிர்பேசுகிறவர்கள் மனந்திரும்புவதற்கு[52] தேவன் அனுமதிக்கும்[53] சத்தியத்தைச் சார்ந்துள்ளது (2:25). இது 2 பேதுரு 3:9ஐ எதிரொலிக்கிறது: "... கர்த்தர் ... ஒருவரும் கெட்டுப் போகாமல் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்." கட்டளையிடுகிறவர் எதிர் பேசுகிறவர் களும், தீயவர்களும் "மயக்கம் தெளிந்து" (2:26) இல்லம் திரும்ப வேண்டு மென்று (லூக். 15:11-24) விரும்புகின்றார்.

மனந்திரும்புதல் உண்மையானதாயிருக்க வேண்டும். சத்தியத்தைப் பற்றி அறிகிற அறிவு மாத்திரமே புத்தியீனத்திலிருந்து நம்மை விடுவிக்க முடியும். மனிதனுக்கு அது தேவைப்படுகிறது மற்றும் நமக்கு அது தேவை என்று தேவன் விரும்புகிறார். மற்றவர்கள் அதை அடையும்படி ஒவ்வொரு சுவிசேஷகனும் அன்பினாலும் சத்தியத்தினாலும் கூடிய ஜெபத்தோடு ஊழியம் செய்வதால் மற்றவர்களுக்கு உதவ வேண்டும்.

திருத்தப்பட்டவர் ''மயக்கம் தெளிகின்றார்''[54] (2:26). பாவிகள் அழைப்பைக் கவனிக்காத வரையிலும், தேவனுடைய கிருபை யாவும், கிறிஸ்துவின் அன்பு யாவும், சுவிசேஷத்தின் வல்லமை யாவும், நற்செய்தியை அறிவிக்கும் கிறிஸ்தவர்களின் நற்பண்பு யாவுயும் பயனற்றதாகவே உள்ளது. அவர்கள் பிசாசின் "வலையில்"[55] இருந்துள்ளதே அவர்களின் நிலையாக உள்ளது. நமக்குப் பல வழிகளில் சோதனைகள் வருகின்றன. சொல்லப் போனால், நாம் கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (1 பேது. 5:8; 1 கொரி. 16:13).

சத்தியத்திற்கு எதிர்ப்பாய் உள்ளவர்கள் தவறான ஓட்டத்தைப் பின்பற்றியுள்ளனர், இவர்கள் "அவனுடைய (பிசாசினுடைய) இச்சையின் படி செய்ய அவனால் பிடிக்கப்பட்டுள்ளனர்.''[56] பிசாசானவனின் ''கைதிகள்'' பலர் உயிருள்ளவர்களாய்ச் சுற்றித் திரிகின்றனர். உயிரோடிருந்தும் செத்திருந்த ஒருத்தியைப் பற்றிய கருத்தைப் பவுல் 1 தீமோத்தேயு 5:6ல் முன் வைத்தார். இச்செயல் முறையானது அழிவுக்கு ஏதுவானதாக உள்ளது, ஏனெனில் பிசாசு கெடுத்துப் போடுகிறான்/ மயக்குகிறான் (யோவா. 8:44; எபே. 2:1-6). எதிர்ப்பு சக்தியைப் போதிய அளவு பெரிதாய் கொண்டிராத அல்லது பிசாசின் அடிமைத்தனத் திற்குள்ளாவதற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து விடுகிற மக்களை சாத்தான்/பிசாசு "ஜெயிக்க" கூடியவனாக இருக்கிறான். பலர் இவ்விதமாக விழுந்துள்ளனர். *இது எவ்வளவு கவலைக்குரியதாக - ஆனால் எவ்வளவு உண்மையானதாக - உள்ளது!*

தேவன் நமக்கு மனந்திரும்புதலை அருளியுள்ளதால் நாம் அவருக்கு நன்றி நிறைந்தவர்களாய் இருப்போமாக (அப். 11:18). ஒரே ஒரு பாவி

*மனந்திரும்பும்பொழுதுகூட சந்தோஷமானது பூமியிலிருந்து பரலோகம் வரையிலும் சென்று அடைகிறது (லூக். 15:3-7).*

## தொகுப்புரையில்

*அதிகாரம் 2ல் வாழ்வு மற்றும் கர்த்தர் பற்றி பவுல் ஆய்ந்துள்ள யாவற்றையும் ஆழ்ந்து சிந்தியுங்கள். எவற்றைத் தவிர்க்க வேண்டும் மற்றும் எவற்றைச் சாதிக்க வேண்டும், எவற்றை விட்டு ஓட வேண்டும் மற்றும் எவற்றைப் பின்பற்ற வேண்டும் என்று மக்கள் அறியும் வரையிலும், ஒவ்வொரு போர் வீரரும் எஜமானுக்காக அணிவகுத்துச் செல்லுதல், தேவனுடைய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதித்தல் என்பது நமக்கு மிகவும் ஆழமாய்த் தேவைப்படுகிறது!*

---

*குறிப்புகள்:*

[1]*பலப்படுதல்* (Gk.: *endunamou*) - *"பலம் தருகிற தேவன் அல்லது கிறிஸ்துவினிடத்தில் ... சிலரை ... பலப்படுத்துதல் ... பிலி. 4:13; 2 தீமோ. 4:17 ... 1 தீமோ. 1:12 ... மத ரீதியான அல்லது ஒழுக்க ரீதியான பலம் ... விசுவாசத்தில் பலமாய் வளருதல், ரோமர் 4:20 ... கட்டளைகளைக் கடைப்பிடித்தலில் வளருதல், எபே. 6:10 ... 2 தீமோ. 2:1"* (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 263). *கட்டளை வினைச் சொல்லானது, இது செய்யப்பட வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறது மற்றும் இடை வினையானது உண்மையில், "தீமோத்தேயுவே, இதை நீ உனக்கே செய்துகொள். நீ இந்த ஊழியத்தின் தூண்டும் ஆளாயிரு" என்றே கூறுகிறது.* [2]*2 பேது. 3:18; 2 கொரி. 8:1-7ஐக் காணவும் (கிருபையில் நாம் வளரக் கூடிய ஆறு வழிகளை வசனம் 7 தருகிறது). 2 கொரி. 9:8-11ஐயும் காணவும்.* [3]*ஒப்புவித்தல்* (Gk.: *parathou*) - *மீண்டுமாக, கட்டளைச் சொல்லானது, இது செய்யப்பட வேண்டும் என்று அர்த்தப் படுத்துகின்றது, மற்றும் இடை நிலை வினைச் சொல்லானது, இந்த சத்தியங்களை எடுத்துக் கொடுத்தலை தீமோத்தேயு தூண்ட வேண்டும் என்று அர்த்தப் படுத்துகின்றது, இதை அவர், சகோதரர்கள் இதன் தேவை பற்றி கவனம் கொண்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் செய்ய வேண்டும்! "ஒப்புவித்தல்" என்ற வார்த்தையின் இயல்பில் இந்தப் பணிப் பொறுப்புடன் தொடர்புடைய தனிச் சிறப்பு மிக்க/குறிப்பிடத்தக்க காரணிகள் காணப்பட முடியும்: "பக்கத்தில் வைத்தல், அருகாக வைத்தல் ... போதித்தலில் (ஒருவருக்கு) முன்னதாக வைத்தல் ... (ஒருவரிடமிருந்து) முன்னதாக அமைத்தல், விளக்குதல் ... எவரொருவருடனும் (ஒருவரிடமிருந்து அல்லது ஒருவருக்காக) கீழாக வைத்தல், முன்னதாகக் கொடுத்து வைத்தல்; ஒருவரின் பொறுப்புக்கு நம்பி ஒப்புக் கொடுத்தல் ... ஒருவர் கவனிக்க வேண்டிய விஷயம், லூக். 12:48; மதரீதியாகக் காக்கப்பட்டு மற்றவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம், 1 தீமோ. 1:18; 2 தீமோ. 2:2"* (C.G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament*, trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977], 486. [4]*தீங்கநுபவித்தல்* (Gk.: *sugkakopatheson*) - *"எவர் ஒருவருடனும் தீங்கு அநுபவித்தல், துன்பத்தைப் பொறுமையுடன் சகித்துக்*

*கொள்ளுதல் … 2 தீமோ. 1:8 … சுவிசேஷத்திற்காகப் பிறருடன் துன்பத்தை அநுபவித்தல், 2:3"* (Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* [New York: Harper & Brothers, 1863], 682); *"… சுவிசேஷத்திற்காக (சிறையில் இருக்கும் அப்போஸ்தலனாகிய, என்னோடே கூட) தீங்கநுபவிப்பதில் சேர்ந்து கொள், 1:8"* (Arndt and Gingrich, 780). *கட்டளை வினைச் சொல்லானது தீமோத்தேயு இவ்விதமாய்த் தீங்கநுபவிக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகின்றது. மற்றும் ஒரு முறைவரும் (குறிப்பு வினை) சொல்லானது அவர் எந்த ஒரு குறிப்பிட்ட பணிப்பொறுப்பிலும் அல்லது நிகழ்ச்சியிலும் இவ்விதமாய்ச் செய்யத் தயாராய் இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகின்றது.* [5]சிக்கிக் கொள்ளுதல் (Gk.: *empleketai*) - *செயப்பாட்டு வினையானது, போர் வீரர் தான் "சிக்கிக் கொள்ளும்படி" தன்னை அனுமதிப்பதில்லை - வெளிப்புறச் செல்வாக்கு எதையும் அனுமதிப்ப தில்லை - என்று அர்த்தப்படுத்துகிறது. ("1.* [நேரடிப் பொருளில்] *முட்களில் தனது உரோமத்தை ஆடு அகப்படுத்திக் கொள்ளுதல், ஓசி. 6:2, 6 … குடிமையின் நாடுதல்களில் சிக்கிக் கொண்டவராகுதல் 2 தீமோ. 2:4"* (Arndt and Gingrich, 256); *"பின்னிக் கொள்ளுதல் அல்லது முடைந்து கொள்ளுதல், ஊடாகப் பின்னுதல் … 2 தீமோ. 2:4''* (Robinson, 243). [6]*வில்லியம் பார்க்ளே அவர்கள், ஒப்பீட்டு நோக்கங்களுக்காகப் போர் வீரர்களைப் பற்றிப் பவுல் அடிக்கடி பயன்படுத்துவதைக் குறிப்பிட்டு (1 தீமோ. 1:18; பிலே. 2; பிலி. 2:25)* பின்வரும் கவனக் குறிப்புக்களைக் கூடக் கொடுத்துள்ளார்: "போர் வீரர் என்ற வகையில் மனிதனைப் பற்றியும், முகாம் என்ற வகையில் வாழ்வைப் பற்றியும் சித்தரித்தல் என்பது ரோமர்களும் கிரேக்கர்களும் நன்கு அறிந்த ஒன்றாக இருந்தது … எபிக்டெட்டஸ் என்பவர், 'ஒவ்வொரு மனிதரின் வாழ்வும் ஒரு வகையான முகாமாக உள்ளது, மற்றும் இது நீண்ட மற்றும் பல்வகைப்பட்ட முகாமாக உள்ளது …' என்று கூறினார் … பவுல் மீண்டும் மீண்டும் கூறும் கிறிஸ்தவ வாழ்வின் போர்ச் சேவகனுடைய பண்புகள் *யாவை?* (i) போர்வீரனின் சேவையானது *ஒருமுகப்படுத்தப்பட்ட* சேவையாக இருக்க வேண்டும் … ஒரு போர் வீரன் போர் வீரனாக மட்டுமே இருக்கிறானே தவிர வேறொன்றுமல்ல. ஒரு கிறிஸ்தவர் தமது கிறிஸ்தவத் தன்மையில் ஒருமுகமாய்க் கவனம் செலுத்த வேண்டும் … அவர் வாழ்வதற்குத் தான் ஈடுபடும் எந்தப் பணியையும் தனது கிறிஸ்தவத் தன்மையைச் செயல்படுத்தப் பயன்படுத்த வேண்டும். (ii) போர் வீரர் என்பவர் *கீழ்ப்படிதலுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளார் …* தக்க வகையிலான உள்ளுணர்வுடன் கூடிய கீழ்ப்படிதலானது அவரது வாழ்வைக் காக்கலாம், மற்றும் பிறரின் வாழ்வையும் காக்கலாம் … (iii) போர் வீரர் *தியாகம் செய்யக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளார் …* ஒரு கிறிஸ்தவர் தேவனுக்காகவும் தனது சக மனிதர்களுக்காகவும், தன்னை, தனது ஆசைகளை, தனது விருப்பங்களை, தனது நல் வாய்ப்புக்களை தியாகம் செய்ய எப்பொழுதும் தயாராய் இருக்க வேண்டும். (iv) போர் வீரர் *ஆர்வப்பற்றுடன் இருக்கும்படி கட்டுப்படுத்தப்பட்டுள்ளார்"* (William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon*, The Daily Study Bible Series, rev. ed. [Philadelphia: Westminster Press, 1960], 182-84). [7]*ஏற்றவராயிருத்தல்* (Gk.: *arese*) - *நிபந்தனை வினைச் சொல்லானது ஒருவர் ஏற்றவராயிருக்கும்படி முயற்சி செய்வதை அறிவிக்கிறது; ஆனால் விஷயம் அத்துடன் முடிவதில்லை, ஏனெனில் தன்னைப் பதிவு செய்து கொள்கிற ஒருவர் அங்கீகாரத்திற்கான நியமத்தை அமைக்கிறார்.* இருப்பினும் *"ஏற்றவராய் இருத்தல்/பிரியப்படுத்துதல் … மத். 14:6; மாற். 6:22; ரோமர் 8:8; 15:2; 1 தெச. 2:15; 4:1; 1 கொரி. 7:32-34; கலா. 1:10; 2 தீமோ. 2:4 … பிரியப்படுத்த உழைத்தல்; பிறரின் கருத்துக்கள், விருப்பங்கள், ஆர்வங்கள் ஆகியவற்றிற்கேற்ப ஒருவர் தம்மைத் தகவமைத்துக் கொள்ளுதல்''* என்பதே இலக்காக உள்ளது (Thayer, 72). [8]*போட்டியிடுதல் (வேதாகமத்தில் இது "பண்ணுதல்"*

*என்றுள்ளது)* (Gk.: *athlese*) - *நிபந்தனை வினைச் சொல்லானது, இது ஒருவர் இவ்வாறு செய்வார் என்று தீர்மானமான உண்மையாக இருப்பதில்லை என்பதை அறிவிக்கின்றது, ஆனால் (வார்த்தைக்) கட்டமைப்பானது, ஒருவர் போட்டியிட வில்லையென்றால் கிரீடத்தைப் பெறுவதில்லை என்று அறிவிக்கிறது!* இவ்வார்த்தையானது கடுமையான போட்டிக்குரியதாக உள்ளது: *"வல்லவர் என்ற வகையில் குத்துச் சண்டை, வட்டெறிதல், மல்யுத்தம், ஓட்டம் முதலிய பொது விளையாட்டுக்களில் போட்டியிடுதல் ... 2 தீமோ. 2:5"* (Robinson, 15); *"... வட்டரங்கில் போட்டியில் பங்கேற்றல் ... அப்போஸ்தலர்கள் பற்றி ... மரணம் வரையிலும் பங்கேற்றனர் ... நாம் ஜீவனுள்ள தேவனுடைய போட்டியில் பங்கேற்கிறோம்"* (Arndt & Gingrich, 20). [9]*புத்தி* (Gk.: *sunesis*) - *"ஒன்றாக ஓடுதல், ஒன்றுகூடிப் பெருக்கெடுத்தல்: இரு நதிகளின் விஷயம் ... புரிந்து கொள்ளுதல், லூக். 2:47; 1 கொரி. 1:19 ... எபே. 3:4; கொலோ. 2:2; 2 தீமோ. 2:7"* (Thayer, 604); *"புரிந்து கொள்ளுதல், புத்திக் கூர்மை, கூரறிவு, சாமர்த்தியம் ஆகியவற்றின் துறை ... உட்கண்ணோக்கு"* (Arndt and Gingrich, 796). [10]*சிந்தித்தல்* (Gk.: *noei*) - *இவ்வகையான சிந்தித்தல் என்பது ஒரு நிலையான செயல்முறையாக உள்ளது. இவ்வார்த்தை யானது, "பகுத்தறிவுள்ள எண்ணப் பிரதிபலிப்பு அல்லது உள்ளான தொகுத்தறிதல், உணர்தல், பகுத்தறிதல், புரிந்து கொள்ளுதல், உள்ளான கண்ணோட்டத்தைப் பெறுதல் ... கட்டளைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளுதல் ... ஆழ்ந்து சிந்தித்தல், குறிப்பெடுத்தல், சிந்தித்துப் பார்த்தல் ... வாசிப்பவர் (இவ்வார்த்தைகளின்) குறிப்பை எழுதுதல் மத். 24:15; மாற். 13:14 ... நான் என்ன கூறுகிறேன் என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள், 2 தீமோ. 2:7 ... மேன்மையான சிந்தை கொண்டிருங்கள்"* (Arndt and Gingrich, 542).

[11]*நினைத்துக் கொள்ளுதல்* (Gk.: *mnemoneue*) - *"சிந்தையில் கொண்டிருத்தல் ... லூக். 17:32; யோவா. 15:20; 16:4, 21; அப். 20:35; 1 தெச. 1:3 ... ஒரு நபரைப் பற்றி நினைத்து உணர்தல் ... கொலோ. 4:18 ... கலா. 2:10 ... நினைவில் வைத்திருங்கள் ... 2 தீமோ. 2:8"* (Thayer, 416). [12]*குற்றவாளி* (Gk.: *kakourgos*) - *"குற்றவாளி, தீமை செய்கிறவர் ... முழுமையும் தவறான செயல்கள் மற்றும் தீவிரமான குற்றங்களைச் செய்கிறவர் ... லூக். 23:32, 39; 2 தீமோ. 2:9"* (Arndt and Gingrich, 399). [13]Elisabeth Elliot, *Shadow of the Almighty* (New York: Harper and Brothers, 1958), 15. [14]*தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்* (Gk.: *eklektos*) - *"மேசியாவுக்காகத் தேர்ந்து கொள்ளப் பட்டவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ... லூக். 23:35 ... மனித குலத்தின் பொதுமையிலிருந்து தேவன் தேர்ந்துகொண்டு, தம்மிடத்தில் இழுத்துக் கொண்ட மக்கள் - மத். 20:16 ... 22:14.* [*பழைய ஏற்பாட்டில்*] *இஸ்ரவேலர்களைப் போல புதிய ஏற்பாட்டில் குறிப்பாகக் கிறிஸ்தவர்கள், 1 நாளா. 16:13; சங். 88:4, 89:3 ... ஏசா. 65:9, 15, 23 ... வழக்கமாகச் சிறப்பானதே தேர்ந்து கொள்ளப்படுவதால், தெரிவு செய்யப்பட்ட, மேன்மையான மக்கள் ... ரோமர் 16:13 ... 1 பேது. 2:4, 6"* (Arndt and Gingrich, 242). [15]Barclay, 193. [16]William Hendriksen, *A Commentary on 1 & 2 Timothy & Titus* (London: The Banner of Truth Trust, 1964), 254. [17]Hendriksen (254-260) *மற்றும்* Barclay (194-95)*ல் பவுல் இங்கு கொடுத்த பின்னணி பற்றிய சில படிப்புகள் உள்ளன.* [18]Barclay, 195. [19]*கவிழ்த்துப் போடுதல்* (Gk.: *me logomachein*) - *"வார்த்தைகள் பற்றிக் கலகம் செய்தல்; சந்தர்ப்பப் பொருளில், வெறுமையான மற்றும் முக்கியத்துவமற்ற விஷயங்கள் பற்றி வாக்குவாதம் செய்தல்: 2 தீமோ. 2:14"* (Thayer, 380). [20]*அழிவுக்கு வழிநடத்துகிற* (Gk.: *katastrophe*) - *"தூக்கியெறிதல், அழிவு ... 2 பேது. 2:6 ... கிறிஸ்துவுக்குப் பரிசுத்தம் செய்யப்பட்ட ஆவியைத் தகர்த்தெறிதல் ... 2 தீமோ. 2:14"* (Thayer, 337); *"அழிதல் ... அழிவுக்கு தீர்ப்பிடுதல் ... கேட்பவர்களை அழித்தல்"* (Arndt and Gingrich, 420).

[21]ஊக்கத்துடன் இருத்தல் (Gk.: *spoudason*) - இது அவசியமானது (கட்டளைச் சொல்) என்பதைக் கவனியுங்கள், மற்றும் இவ்வார்த்தையே, "அவசரப்படுத்துதல் ... அப். 20:16 ... லூக். 2:16 ... உண்மையாகவே விரும்புதல் ... 2 பேது. 3:12" என்று அர்த்தப்படுகிறது (Thayer, 584); "வைராக்கியமாய் இருத்தல், ஒருவர் தம்மையே ஈடுபடுத்துதல், செயல்படுபவராய் இருத்தல் ... முயற்சித்தல்" (Arndt and Gingrich, 769). [22]உத்தமனாய் (Gk.: *dokimos*) - "சோதிக்கப்பட்டு உண்மையானவராய் இருத்தல் ... 2 கொரி. 10:18; 13:7; 2 தீமோ. 2:15 ... மதிக்கப்பட்ட மற்றும் மேன்மையாய்க் கருதப்பட்ட ... விலையேறப் பெற்ற" (Arndt and Gingrich, 202). [23]ஊழியம் செய்பவர் (Gk.: *ergates*) - "ஒரு உழைப்பாளி ... மத். 10:10; லூக். 10:7; 1 தீமோ. 5:18 ... ஆசிரியர்கள்/போதகர்கள் என்ற வகையில் மனிதர்களின் மத்தியில் கிறிஸ்தவத்தைப் பரப்பி மேம்படுத்த உழைக்கின்றவர்கள்: 2 கொரி. 11:13; பிலி. 3:2; 2 தீமோ. 2:15" (Thayer, 248). [24]வெட்கப்படாத (Gk.: *anepaischuntos*) - "வெட்கத்திற்கான, பொறுப்பற்ற தன்மைக்கான காரணம் இல்லாத நிலை, 2 தீமோ. 2:15" (Robinson, 54). [25]நிதானமாய்ப் பகுத்தல் (Gk.: *orthotomeo*) - "நேராய் வெட்டுதல் ... ஒருவரின் வழியை வெட்டி நேராக்குதல், இயக்குதல் ... 2 தீமோ. 2:15 ... சத்திய வசனத்தை நேராய்ப் பகுத்தல், அதாவது சரியாகவும் திறமை மிக்க வகையிலும் அதைப் போதித்தல்" (Robinson, 515); "... சத்திய வசனத்தைக் கொண்டு (இலக்கு நோக்கி நேர் செல்லும் சாலை போல) நேர்ப் பாதையில் வழிநடத்துதல், இது வார்த்தைகள் குறித்த தர்க்கம் அல்லது பக்தியற்ற பேச்சு ஆகியவற்றினால் பக்கம் திரும்பாதபடியிருந்து செய்யப்பட வேண்டும், 2 தீமோ. 2:15 ... வசனத்தை நேராய்ப் போதித்தல், அதை ஆரோக்கியமாய் விளக்கியுரைத்தல், சரியாய் உருப்படுத்துதல்" (Arndt and Gingrich, 584). [26]சீர்கேடும் வீணானதும் (Gk.: *bebelos*) - "ஒவ்வொரு வருக்கும் வழி கொடுக்கக் கூடியது, அசுத்தமானது, புனிதமற்றது, ... சடங்காச்சாரக் கருத்தில் இல்லாதது ... , ஆனால் ஒழுக்க ரீதியான மற்றும் [மதம் சார்ந்த] சொற்றொடர் ... உலகப் பிரகாரமான பாட்டியின் கதைகள், 1 தீமோ. 4:7 ... அசுத்தமும் வெறுமையுமான பேச்சு ... 2 தீமோ. 2:16 ... தேவனற்ற தன்மை ... 1 தீமோ. 1:9" (Arndt and Gingrich, 138). [27]வீண் பேச்சு (Gk.: *kenophonia*) - "வெறுமையான பேச்சு ... தேவனற்ற வீண் பேச்சு 1 தீமோ. 6:20; 2 தீமோ. 2:16" (Arndt and Gingrich, 429); "... வீணான மற்றும் பயனற்ற விஷயங்களைப் பற்றிய கலந்துரையாடல்" (Thayer, 343). [28]விலகியிருத்தல் (Gk.: *periistaso*) - "சுற்றிலும் நிற்றல் ... கூட்டம் அருகில் நிற்குதல், யோவா. 11:42 ... அருகில் நிற்பவர்கள் ... தவிர்ப்பதற்காகச் சுற்றிச் செல்லுதல், தவிர்த்தல், அகற்றுதல் ... 2 தீமோ. 2:16" (Arndt and Gingrich, 653); "ஒருவர் தம்மையே திருப்புதல் ... சிலவற்றைத் தவிர்க்கும் நோக்கத்திற்காக அவ்வாறு செய்தல், எனவே தவிர்த்தல், அகற்றுதல் ... தீத்து 3:9" (Thayer, 503). [29]தேவபக்தியில்லாமை (Gk.: *asebeia*) - "தேவனிடம் பயபக்தி குறைவு, பக்தியின்மை ... ரோமர் 1:18; 2 தீமோ. 2:16; தீத்து 1:12 ... தேவபக்தியற்ற சிந்தனைகள் மற்றும் செய்கைகள், ரோமர் 11:26 ..." (Thayer, 79). [30]அரிபிளவை (Gk.: *gaggraina*) - "புற்று நோய், சீழ்வடியும் புண்களின் பரவுகை ... அவதூறுகள் பற்றியது ... 2 தீமோ. 2:17" (Arndt and Gingrich, 148); "முழு உடலிலும் மரண நிலையானது படிப்படியாகப் பரவுதல்" "உடலின் எந்த பாகமாவது மிகவும் அழிவுறும்படி வீக்கத்தினால் உபத்திரவப்படக் கூடிய ஒரு வியாதி, இதற்கு ஏற்ற வகையிலான சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றால், இந்தத் தீங்கு தொடர்ந்து பரவி, மற்ற பாகங்களை அழித்து, கடைசியில் எலும்புகளையும் தின்று விடுகின்றது" (Thayer, 107).

[31]Ronald Ward, *Commentary on 1 and 2 Timothy & Titus* (Waco, Tex.: Word Books, 1974), 173. [32]விட்டு விலகுதல் (Gk.: *astocheo*) - "தவறுதல், விலகிச் செல்லுதல், ...

*விசுவாசத்தைப் பொறுத்தமட்டில் இலக்கைத் தவற விடுதல் ... 1 தீமோ. 1:6 ... 6:21 ... 2 தீமோ. 2:18 ... தவறான சிலர் ... (வார்த்தையிலும் செய்கையிலும்) விலகிச் சென்றுள்ளவர்கள்''* (Arndt and Gingrich, 117). [33]Hendriksen, 265. [34]*கவிழ்த்துப் போடுதல்* (Gk.: *anatrepousin*) - *"வீழ்ச்சிக்கு காரணமாகுதல் ... அழித்தல் ... தலைகீழாய்த் திருப்புதல் ... முழுக் குடும்பங்களை அழித்தல், அதாவது கள்ள போதனையினால் ... தீத்து 1:11"* (Arndt and Gingrich, 62). *இங்குள்ள வினைச் சொல்லானது தொடர்ந்து நிகழும் செயல்முறையாக உள்ளது; மக்களின் விசுவாசமானது இன்னமும் கவிழ்த்துப் ''போடப்பட்டது.''* [35]*''தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்'' என்ற கருத்தானது கால்வீனியத்தின் தவறான போதனையாக உள்ளது.* [36]Hendriksen, 266; Barclay, 201-4; Ward, 175-76. [37]*நிலைநிற்குதல்* (Gk.: *hesteken*) - *"இடுதல், வைத்தல், அமைத்தல் ... ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக முன் வைத்தல், ... அப். 1:23 ... 6:13 ... நிலை நாட்டல், உறுதிப்படுத்துதல், மதிப்புள்ளதாக்குதல் அல்லது மதிப்புள்ளதாகக் கருதுதல் ... ரோமர் 3:31; எபி. 10:9 ... ரோமர் 10:3 ... யாரேனும் ஒருவரை (tina) நிலைநிற்கச் செய்தல் ... உறுதியாக்குதல் ... மத். 26:15 ... உறுதியாய் நிலைநிற்றல், ஒருவரின் அடிப்படையைப் பற்றுதல் (சங். 35:13; 36:12) ... அஸ்திபாரம் நிலைநிற்கின்றது (அசைக்க இயலாததாக நிற்கிறது) 2 தீமோ. 2:19"* (Arndt and Gingrich, 282-83). *முற்று வினையானது தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைநிற்கிறது, மற்றும் தொடர்ந்து நிலைநிற்கும் என்ற தீர்மான உண்மையை அறிவிக்கிறது.)* [38]Hendriksen, 267. [39]*1 கொரி. 6:19, 20; 7:23; 1 பேது. 1:18, 19; 2:9-11.* [40]*விலகுதல்* (Gk.: *aposteto*) - *கட்டளை வினைச் சொல்லானது இது செய்யப்பட வேண்டும் என்று அர்த்தப் படுகிறது, ஒருமுறை மட்டும் வரும் வினைச் சொல்லானது (குறிப்பு வினை) "கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு வருதல்" என்பதை விட முற்றான நடவடிக்கை ஏற்படுத்துதலை அர்த்தப்படுத்துகின்றது, மற்றும் ஒருமைச் சொல்லானது, இது தனிநபருக்குரிய விஷயம் என்று அர்த்தப்படுத்துகிறது - ஒவ்வொருவரும் அந்த நடவடிக்கையை அல்லது விடுதலை மேற்கொள்ள வேண்டும். கிரேக்க மூல வார்த்தையான* aphiteme *என்பது, "... புறம்பே செல்லுதல், திரும்பப் பெறுதல் ... லூக். 2:37 ... கைவிடுதல் ... அப். 15:38 ... விலகுதல் ... 2 தீமோ. 2:19; ஓசி. 6:1, 4 ... விலகுதல் என்று அர்த்தப்படுகின்றது"* (Arndt and Gingrich, 126).

[41]*"தேவனால் அறியப்பட்டிருப்பது" அல்லது நாம் "தேவனை அறியப்" பெறுவது என்ற இவ்விஷயமானது மார்வின் வின்சென்ட் அவர்களால் ஆய்வு செய்யப் பட்டுள்ளது. 2 தீமோ. 2:19க்கான அவருடைய குறிப்பிலிருந்து, அவர் கலா. 4:9ன் மீது ஏற்படுத்திய விளக்கங்களைக் குறிப்பிட்டார். அங்கு அவர் பின்வருமாறு எடுத்துரைத்தார்: ''தேவனுக்கும் அவருடைய புத்திரர்களுக்கும் இடையில் அறிதலின் உறவானது தேவனிடமிருந்து தொடங்குகின்றது. கலாத்தியர்கள் தேவனைப் பற்றிய அறிவை உள் தூண்டுதலினாலோ அல்லது தர்க்க அறிவின் எந்த ஒரு செயல்பாட்டினாலோ பெற்றிருந்ததில்லை. 'அவர்கள் தேவனை அறிவதற்கு முன்பே தேவன் அவர்களை அறிந்தார், மற்றும் அவர்களை அவர் அறிந்திருந்ததே அவர்கள் அவரை அறிதலுக்குக் காரணமாயிற்று'* (Eadie). *1 கொரி. 13:12; 2 தீமோ. 2:19; மத். 7:23 ஆகியவற்றை (ஒப்பிடவும்). 'தேவனைப் பற்றிய நமது அறிவானது நமது செயல் என்பதை விட அதிகமாக அவரது செயல் என்பதாக உள்ளது' என்று டீன் ஸ்டேன்லீ குறிப்பிடுகிறார். தேவன் ஒரு மனிதனை அறிகிறார் என்றால், அந்த உண்மை மனிதனுக்குள் கடந்து வருகிற தேவனுடைய செயல்பாட்டை மறை முகமாய்க் குறிப்பிடுகிறது, அந்தச் செயல்பாட்டினால் அம்மனிதர் தேவனுடைய அறிவுக்கு உட்பட்டவர் என்ற வகையில் தேவனுடைய அறிவுக்குள் வருகிறார்''* (Marvin R. Vincent, *Word Studies in the New Testament,* vol. 4 [Grand Rapids, Mich.: Wm.

B. Eerdmans Publishing Co., 1957], 139, 304). *வின்செண்ட் கூறியது உண்மையாகவே உள்ளது, ஆனால் இந்தக் காரண அறிவில் இருந்துதான் சிலர் கால்வீனியத்திற்குத் தாவியுள்ளனர், அவர்கள் இவ்விஷயத்தில் மனிதனுக்கு சித்தம் எதுவும் இல்லை என்று முடிவுசெய்துள்ளனர். அந்தக் கருத்தானது 2 பேது. 3:9; அப். 10:34, 35; யோவா. 3:16; யோசு. 24:15; மற்றும் வெளி. 22:17 போன்ற வசனப் பகுதிகளில் வலுவாக மறுக்கப்பட்டுள்ளது. தேவன் தம்முடையவர்கள் யார் என்பதை அவர்கள் எவ்வாறு தம்முடைய சித்தத்தைச் செய்கின்றனர் என்பதைக் கொண்டு அறிகிறார், ஆனால் அவருடைய சித்தத்தைச் செய்வதா இல்லையா என்பதை நாமே முடிவு செய்கிறோம்!* [42]*கனம்* (Gk.: *time*) - *"உயர்வு, மதிப்பு ... கனம், பயபக்தி ... செயல் என்ற வகையில் கனம், பயபக்தி அல்லது மரியாதையைக் காண்பித்தல் ... ஒருவர் மகிழ்வுடன் அனுபவிக்கின்ற மரியாதை ... கனம் விசுவாசிகளுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது, 1 பேதுரு 2:7 ... எபி. 3:3 ... ஒரு பாத்திரமானது அது எந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்து கனம் பெறுகிறது (அல்லது கனவீனம் அடைகிறது) ரோமர் 9:21; 2 தீமோ. 2:20 ... மதிப்புமிக்க ஒரு பொருள்; எசே. 22:25 ... பெரும்பாலும் பரலோகத்திற்கு உரிய உடமைகள்: ரோமர் 2:7 ... வச. 10 ... மதிக்கத்தக்க வகையில் இருக்கும் ஒருநிலை என்ற வகையில்"* (Arndt and Gingrich, 825); *"கிரயம் நிர்ணயக்கப்படுகிற ஒரு மதிப்பிடுதல் ... விலை குறிக்கப்பட்ட பொருள் ... வெளி. 21:24 ... பிறரை பின்னுக்குத் தள்ளுகிற ஒருவரின் மதிப்பு, முன் சிறப்பு ... எபி. 2:7, 9; 2 பேது. 1:17 ... ஒருவர் தகுதியானவர் என்று தீர்ப்பிடப்படும் புகழ்ச்சி, 1 பேது. 3:7"* (Thayer, 624). [43]*கனவீனம்* (Gk.: *atimia*) - *"கனவீனம், அவகீர்த்தி ... 1 கொரி. 11:14 ... 2 கொரி. 6:8; 1 கொரி. 15:43 ... ஒரு இறந்த உடலின் தகுதியற்ற தன்மை அல்லது (நோய்) தாக்கும் தன்மைக்குப் பயன்படுத்தப்பட்டது ... 2 கொரி. 11:21 ... இழிவான இச்சைகள், முரட்டுத்தனமான ஆசைகள், ரோமர் 1:26; 9:21; 2 தீமோ. 2:20"* (Thayer, 83). [44]*பரிசுத்தப்படுத்துதல்* (Gk.: *egiasmenor*) - *"தூயது அல்லது பரிசுத்தமானது என்று தரவழைத்தல் அல்லது அறிவித்தல், தூய்மைப்படுத்துதல் ... தேவனுடைய பரிசுத்த தன்மையிலிருந்து தேவனுடன் தொடர்புடைய ஏதொன்றுக்கும் கடத்தப்படும் பரிசுத்த தன்மையின் அடையாள முத்திரை ... அசுத்தமான பொருள்களில் இருந்து பிரித்து தேவனுக்கு அர்ப்பணித்தல் ... ஆத்துமா சீர்படுத்தப்படுதலினால் உள்ளாகத் தூய்மைப் படுத்துதல்: யோவா. 17:17, 19 (சத்தியத்தை அறிகிற அறிவின் மூலமாக, இ.வ. யோவா. 8:32); 1 தெச. 5:23"* (Thayer, 6). *முற்று வினையானது பரிசுத்தப்படுத்தும் செயல்பாடு நடந்துள்ளது என்று சுட்டிக்காண்பிக்கிறது, மற்றும் செயப்பாட்டு வினையானது, இது இன்னொரு அல்லது சில வெளிப்புற ஆதார மூலத்தினால் செய்யப்பட்டது என்று அர்த்தப்படுகின்றது. இதைத் தனியாக நாம் சாதிக்க இயலாது.* [45]*உபயோகமான* (Gk.: *euchrestos*) - *"பயன்படுத்தப்படச் சுலபமானது, பயன் மிக்கது, ஆதாயம் தரக் கூடியது, 2 தீமோ. 2:21; 4:11; பிலே. 11 ..."* (Robinson, 309). [46]*ஆயத்தம்* (Gk.: *hetoimasmenon*) - *நேர்ப்பொருளில், "ஆயத்தமாக இருந்துள்ள"; "அவசியமான தயாரிப்புகளை ஏற்படுத்துதல், ஒவ்வொன்றையும் பெற்று அவற்றைக் கடந்து செல்லக் கூடியதாக்குதல் லூக். 12:47,... இராஜாவின் பயணத்திற்கு முன் சாலைகளை சரிப்படுத்தவும், கடந்து செல்லக் கூடியதாக்கவும் சிலரை அனுப்புதல் ... மேசியாவுக்குத் தக்க வரவேற்பு அளிக்கும்படியும் அவருடைய ஆசீர்வாதங்களை அடையும்படியும் மனிதர்களின் சிந்தைகளை ஆயத்தப்படுத்துதல்: மத். 3:3; மாற். 1:3; லூக். 3:4 ... 1:76 ... வெளி. 8:6 ... அழகுமிக்க வகையில் அலங்கரிக்கப்பட்ட, வெளி. 21:2 ... ஏதொன்றுடனும் துணையாயிருக்கத் தகுதியான, 2 தீமோ. 2:21; வெளி. 9:7"* (Thayer, 255). *இது "பரிசுத்தமாக்கப்பட்டுள்ள நிலை" போலவே, மீண்டுமாக ஆத்துமா அதன் தயார் நிலையில் (நற்கிரியைகளுக்கு ஏற்ற முடிக்கப்*

பட்ட உற்பத்திப் பொருள் - எபே. 2:10ஐக் காணவும்.) இருப்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது மற்றும் மாற்றமானது இன்னொரு ஆதார மூலத்தால் செயல் படுத்தப்பட்டது (செயப்பாட்டு வினை). [47]இச்சைகள் (Gk.: *epithume*) - "... ஒருவர் இருதயத்தை ஒன்றின் மீது வைத்தல் ... விருப்பம் கொள்ளுதல் ... இச்சை, பேராசை, தடை செய்யப்பட்டவற்றை நாடுதல்" (Thayer, 238). [48]விலகியோடு (Gk.: *pheuge*) - "புறம்பாக விலகியோடுதல் ... அருவருக்கப்படக் கூடிய சிலவற்றை, விசேஷமாக குற்றங்களை (ஓட்டத்தினால் விலக்குதல் அல்லது தவிர்த்தல்) ... 1 கொரி. 6:18 ... 1 தீமோ. 6:11; 2 தீமோ. 2:22'' (Thayer, 651). பவுலின் (வார்த்தைக்) கட்டமைப்பின்படியாக, இது செய்யப்பட வேண்டும், மற்றும் இப்பொழுதே செய்யப்பட வேண்டும் (நிகழ்கால வினை). [49]நாடுதல் (Gk.: *dioke*) - விலகியோடுதல் என்பதற்கு ஒப்பான/என்பதைப் போன்றதேயான இந்தக் கட்டமைப்பானதும் கூட செய்யப்பட வேண்டியதாகவும், இப்பொழுதே செய்யப்பட வேண்டியதாகவும் உள்ளது (நிகழ்கால வினை). நீங்கள் தவறினை விட்டு (விலகியோடி) வந்த பிறகு நன்மை செய்யக் கடந்து செல்வதற்கு நேரம் எதையும் விட்டு வைக்காதிருங்கள். சோம்பேறித்தனம் என்பது பிசாசின் தொழிற்சாலையாக உள்ளது (மத். 12:43-45ஐக் காணவும்)."நாடுதல்'' என்ற வார்த்தையானது (Gk.: *dioko*). "ஒரு நபர் அல்லது பொருளைப் பிடிப்பதற்காக விரைந்தோடுதல் ... வலியுறுத்தத்துடன் நிற்றல் ... [உருவக நடையில்.] ஒரு பந்தயத்தில் இலக்கை அடைய விரைவாய் ஓடுபவர், பிலி. 3:12 ... லூக். 17:23 ... ஆவலுடன் பின்பற்றி நாடுதல், அடைவதற்காக உண்மையாகவே உழைத்தல் ... 1 தீமோ. 6:11; 2 தீமோ. 2:22" (Thayer, 153). [50]மதியீனமான (Gk.: *moros*) - "விவேகமற்ற, முன் சிந்தனை அல்லது ஞானம் இல்லாத ... வெறுமையான, பயனற்ற நிலையில் இருத்தல் ... 2 தீமோ. 2:23; தீத்து 3:9 ... பக்தியற்ற, தேவனற்ற (ஏனென்றால் இப்படிப்பட்ட ஒரு மனிதர் இரட்சிப்புக்குத் தொடர்புடையவற்றைப் புறக்கணித்து அவமதிக்கின்றார்), மத். 5:22" (Thayer, 420).

[51]திருத்துதல் (Gk.: *paideuo*) - ''வார்த்தைகளினால் சிட்சித்தல் அல்லது தண்டித்தல்: கடிந்து கொள்ளுதல் மற்றும் புத்தி கூறுதலினால் பிறரின் பண்புகளை உருக்கொடுப்பவர், 2 தீமோ. 2:25" (Thayer, 473). [52]மனந்திரும்புதல் (Gk.: *metanoia*) - "சிந்தையில் மாற்றம் ... தங்கள் தவறுகள் மற்றும் தீய செயல்கள் அருவருக்கத் தொடங்கியவர்கள் மற்றும் வாழ்வின் சிறந்த ஓட்டத்திற்குள் பிரவேசிக்கத் தீர்மானம் செய்து, அதன் மூலம் பாவத்தைப் பற்றிய புரிந்து கொள்ளுதலையும், அதற்கான வருத்தத்தையும் அரவணைத்துக் கொண்டு, இருதயத்தில் தீர்மானம் செய்து, நற்செய்கைகளை அடையாளங்களாகவும் செயல்விளைவுகளாகவும் காண்பிப்பவர்கள் பற்றியது'' (Thayer, 450-51). [53]அனுமதித்தல் (Gk.: *doe*) - "கருத்தின்படி வகையானது விருப்பத்தின் பொருள் விளக்கத்தில் பயன்படுத்தப் பட்ட வினைச் சொல்லின் சாதாரண வடிவமாக உள்ளது" (H. E. Dana and Julias R. Mantey, *A Manual Grammar of the Greek New Testament* (New York: Macmillan Co., 1955), 173). இந்த வகையானது புதிய ஏற்பாட்டில் அறுபத்தியேழு முறை மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடத்தில் இது, இந்த ஆத்துமா மனந்திரும்புவதற்கு தேவனுடைய பகுதியின் இரட்டை விருப்பத்தை அறிவிக்கப் பவுலினால் தக்க வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையானது தேவனுடைய பகுதியில் "விருப்பத்தை" வலியுறுத்துவது மட்டுமின்றி, இவ்வார்த்தையானது "ஒருவருக்கு அவருடைய முன்னேற்றத்திற்காகச் சிலவற்றைத் தமது சொந்த விருப்பத்தின்படி இன்னொருவர் கொடுத்தல் ... ஒரு கொடையாகக் கொடுத்தல் ... பெறும்படி அனு மதித்தல் ... கொடுத்தல், விநியோகித்தல்" என்றும் அர்த்தப்படுகிறது (Thayer, 145). [54]மயக்கம் தெளிதல் (Gk.: *ananepho*) - "மீண்டும் தெளிவாகுதல் ... ஒருவர் தம் உணர்வுகளைப் பெறுதல், ஒருவர் தம்மை மீண்டும் சுய நிலைக்குக் கொண்டு

*வருதல், 2 தீமோ. 2:26”* (Robinson, 48); *“ஆரோக்கியமான சிந்தைக்குத் திரும்பும்படி பிசாசின் வலையிலிருந்து விடுதலையாகுதல்”* (Thayer, 40). [55]*வலை* (Gk.: *pagis*) - *“சேதத்தை, இழப்பை, அழிவைக் கொண்டு வரும் எதுவும்: திடீரென்று, எதிர்பாராத வகையில் ஏற்படும் மரணத்திற்கேதுவான சேதம், ரோமர் 11:9 … பாவத்தின் கவர்ச்சிகள் மற்றும் மயக்கங்கள் … 1 தீமோ. 6:9 … நீதி. 12:13,* cf. *29:6 … பிசாசானவன் ஒருவரைக் கட்டி வைக்கிறதற்குப் பயன்படுத்தும் பாவம், 2 தீமோ. 2:26; 1 தீமோ. 3:7”* (Thayer, 472). [56]*அடிமையாய்ப் பிடிக்கப்படுதல்* (Gk.: *ezogremenoi*) *“உயிருடன் எடுத்தல், கைதியாய்ப் பிடித்தல் … எடுத்துக் கொள்ளுதல், பிடித்துக் கொள்ளுதல், … ஜெயித்தல் … லூக். 5:10 … 2 தீமோ. 2:26 … சாத்தானால் … அடிமைப் படுத்தப்படுதல், … வலையில் அகப்படுத்துதல், மயக்கப்படுதல்” முற்றுவினையானது இந்த ஆத்துமாக்கள் “அகப்படுத்தப்பட்ட” நிலையில் மட்டும் இருப்பதில்லை என்று அர்த்தப்படுகிறது, அவைகள் பிடிக்கப்பட்டது முழுமையமைந்தது. தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அளிப்பார் என்பதால், அவர்களின் சூழ்நிலை நம்பிக்கையற்ற நிலையில் இருப்பதில்லை (எபி. 6:4-6ஐக் காணவும்), ஆனால் அவர்கள் கடந்து வர இது காலமாக உள்ளது! செயல்பாட்டு வினை இவர்கள், பிசாசு பயன்படுத்தக் கூடிய எவ்வித வெளிப்புறச் செல்வாக்கின் மூலமாகவும் இது நடைபெற அனுமதித்தனர் என்பதை அறிவிக்கிறது.*